
"அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு"

# நம்மட முற்றம்

விடை (வைகாசி) 2023 | இல்லம் 03 | முற்றம் 07



150 உருபா

- தாக்தல் இடி முழக்கம்
- என் சித்திரப் பாவைக்கு
- வெற்றிடம்
- பொருள்முதவாத விதிகள்
- நான் தயாராவே இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


**ஆசிரியருரை**

மலையகத் தொழிலாளர்களின் கைகளில் ...? 01

**தொடர் கடிதம்**

என் சித்திரப்பாவைக்கு! 03

**தொடர்**

தாக்குதல் இடி முழக்கம் 08

**கவிதைகள்**

புகைத்தலை ஒழிப்போம்! 12
நான் தயாராவே இல்லை 23
மனிதம் 31
வெற்றிடம் 37
நிலவின் ஒளியில் 40
வேண்டும்... வேண்டாம்... 51
தொலைந்து போன கவிதையும்
தொலைநாள் போன இதழ்களும் 55

**சிறுகதைகள்**

சுடலை ஞானம் 13
பொழுதுகள் விடியாமலில்லை 32
ஏலாதென்று ஆர் சொன்னது? 57

**கட்டுரைகள்**

பொருள்முதல் வாத விதிகள் 17
அரிய தமிழ்க்கல்வெட்டு ... கண்டுபிடிப்பு 24
உருவத்திலல்ல உள்ளத்திலே... 38
தமிழ்அறிவோம் 39
நாகர்களும், நயினார்தீவும், வருங்காலமும். 41
மே நாள்: தொழில் நுட்ப யுகத்தில் 52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறிவைத் தந்திடத் துடிக்கும்
தமிழ்த் திங்கள் ஏடு"

நம்மட முற்றம்

விடை (வைகாசி) 2023

இல்லம் 03 | முற்றம் 07

உருபா - 150.00

முதன்மை ஆசிரியர்

திரு.கதிர்.திருச்செல்வம்

ஆசிரியர் குழு

திரு.அ.ரவீந்திரன்
திருமதி.சுஜந்தினி யுவராஜா
ஜனாப்.ஹ.மு.மு.மன்சூர்
ஜனாபா.மர்ளியா சக்காப்
திரு.வ.மகேஸ்வரன்
செல்வி.ரொஷானி ரவீந்திரன்
திரு.இரா.இரத்தினசிங்கம்

தொடர்புகளுக்கு :

"நம்மட முற்றம்"
48/116, விநாயகபுரம்,
கண்டித் தெரு,
திருக்கோணமலை.

தொலைபேசி : 0772908990
மின்னஞ்சல் :
nammadamuttam20@gmail.com

# மலையகத் தொழிலாளர்களின் கைகளில் உடைமைகள் ஆவது எப்போதோ?

உழைக்கும் தொழிலாளர்கள் தமது உழைப்பிற்கான நேரவரையறைகள் செய்து கொண்டதன் நிமிர்த்தமாக நாளொன்றிற்கு எட்டு மணிநேரமே ஒருநாள் உழைப்பு என்றானதன் பின்னர் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்களா என்றால் அதற்கான விடை எதிர் மறை யாகவே வந்துவிடுகின்றது.

இந்த உலகமே தொழிலாளர்களின் இயக்கம் இல்லாது போனால் அப்படியே நின்றுவிடுகின்ற நிலை இருந்த போதும் ஏன் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழிலாளர்களாகவே வாழ்கின்றனர்? ஏன் அவர்களால் இந்த உலகை தமது காலடியில் கிடத்த முடியாமல் இருக்கின்றது?

சிறிலங்காவின் பொருண்மியத்தின் முதுகெலும்பாக இருக்கும் பெருந் தோட்டத்துறையில் பணியாற்றும் மலையகத் தமிழர்கள் இந்தியாவிலிருந்து பிரித்தானியர்களால் சிறிலங்காவிற்கு கொண்டுவரப்பட்டு இருநூறு (200) ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மேற்போந்த கேள்விகள் அவர்களுக்கும் பொருத்தமானதாகவே இருக்கின்றன.

அன்றிலிருந்து இன்றுவரை மலையக மக்கள் தமக்கென உரித்துடைய உறைவிடங்களோ இருப்பிடங்களோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றி வாழ்வது காலத்தின் கொடுமை அல்ல. மாறாக அம்மக்களது செயல்பாடுகள் துண்டாடப்பட்ட நிலையும் அம்மக்களை வழிநடத்துவோர் எனப்படுவோர் அல்லது கூறிக்கொள்வோரது தன்னலத்துடன் கூடிய தூரநோக்கற்ற துரோகத்தனமான செயல்பாடுகளும் நாளாந்த நடவடிக்கைகளும் முதன்மையிடம் பெறுகின்ற அதே வேளை அம்மக்களால் தன்னிலையில் செயற்பட முடியாமல் இருப்பதற்கு முதன்மைக் கரணியமாக இருப்பது அவர்களுக்கென்று உடைமைகள் அவர்களிடம் இல்லாமலிருப்பதுதான்.

உழைக்கின்ற மலையகத் தொழிலாளர்களின் உடைமைகள் அவர்களுக்கென்றாக வேண்டும். அவர்களது பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை காட்டப்படல் வேண்டும். சரியான தலைமையின் கீழ் செயற்பட வேண்டும் என்ற வழிகாட்டல் வழங்கப்படுகின்ற அதேவேளை அவ்வாறானதொரு எண்ணமும் அம்மக்களது மனங்களில் எழ வேண்டும். ஆதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

"மலையக மக்களது உழைப்பிடங்களும் வாழ்விடங்களும் அம்மக்களுக்கான உடைமையாக்குவதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும். அதுவே இவ்வளவு காலமும் சிறிலங்காவிற்காக உழைத்த மக்களுக்கு இந்நாட்டு மக்கள் செய்யும் கைமாறாக இருக்கும்."

கதிர்.திருச்செல்வம்.

**முதன்மை ஆசிரியர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சித்திரப்பாவைக்கு!

முனைவர் க.சரவணபவன்
அன்புவழிபுரம்



சாளரத்தின் வழியாக நிலாக்கதிர் என் மேசையில் படர்ந்து கொண்டிருந்தது. நான் திரும்பிப் பார்க்கின்றேன். நிலவு இரண்டாம் சாமத்தைக் கடந்து கொண்டிருக்கின்றது. இன்று புத்தரின் அறிவுநிலா என்பது தலையில் உறைக்க, அகதா கிறிஸ்டியின் துணையை மெதுவாக விலக்கிவிட்டு என் தோற் பையில் இருந்து உன் ஓவியச் சுருளை எடுத்து விரல்கள் படாமல் விரிக்கின்றேன். உதட்டோடு ஒட்டிய புன்னகையுடன் ஆழ்ந்த தியானத்தில் புத்தர். அவர் காலடியில் செந்நீல அல்லி மலர்கள். அழகான வண்ணக் கலவையால் அள்ளித் தெளித்திருந்தாய். எத்தனை ஆண்டுகள்! பனித்த கண்களுடன் நீ வரைந்த பெருமானைப் பார்க்கின்றேன். 'ஆசையே துன்பத்திற்கு காரணம்' என இன்னும் எத்தனை தடவைகள் என்னால் கூவ முடியும் என்பது போல புத்தரின் தரிசனம் எனக்குப்பட்டது.

வணக்கம்! இப்படித்தான் உன் அறிமுகமும் எனக்கு கிடைத்தது. உதடு பிரியாத சிரிப்புடன் அப்படியே என் பெயரையும் சேர்த்து அழைத்தாய். பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தேன். இருபத்தியிரண்டு வயது ரவி வர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம் ஒன்று அமிதாப்பச்சனின் காது உயரத்திற்கு என்னருகில் நிற்பது போல் இருந்தது. கன்னத்தில் தடவியிருந்த நிவியா க்ரீமில் பரு ஒன்று அழகாக மிதந்து கொண்டிருந்தது. அதுவும் முதலாண்டு மாணவனைப் பார்க்க இரண்டாம் ஆண்டு ஆங்கில இராச்சிய இங்கிலிஸ் லிற்ரேஜர் மாணவி... இரு விநாடித்துடிப்புக்கள் நின்று துடிக்க ஆரம்பித்தது இதயம்.

தமிழ்ச் சங்க விழா. எனக்கு உதவ முடியுமா? நீ கேட்ட போதே இருவரும் பேசத் தொடங்கினோம்.

'சினிமாத்தனமாக போய்விடாதே' என்ற என் ஒருமை ஒற்றை வரிக்கு பலமுறை தலை அசைத்தாய்.

பாரதிதாசனின் கவிதை தெரியுமா என்றேன்.

தமிழுக்கும் அமுதென்று பேர்..., பஞ்சவர்ணக்கிளி, கே.ஆர் விஜயா என்றாய்.

அது தான் சினிமா வேண்டாம் என்றேனே என்றேன்.

அது சரி உனக்கு பாட வருமா என்றேன்.

அதே பஞ்சவர்ணக்கிளி; கே. ஆர் விஜயாவில் இருந்து இரு வரிகள் பாடினாய்.

எவரையுமே ஒரு 'அச்சா' புன்னகை போட வைக்கும் வசீகரக் குரல் உனக்கிருந்தது. அச்சு அசலில் இன்றைய சிரேயா கோசல்.

இப்படித்தானே நாங்கள் பேச ஆரம்பித்தோம்?

நாளும்ம் புற்தரையில் நடந்தோம். நீ என் காதோரமாக பயிற்சி எடுத்தாய்.

அன்று மாலை தமிழ்ச் சங்க மேடையில் நான்கு தோழிகளுடன் உன் கவிதை நாட்டியம். பாரதிதாசனின் கவிதை வரிகளைப் பாடுகின்றாய்.

இருண்ட மேடையில் உன் மீது ஒளி விழுந்த போது அரங்கம் நிசப்தத்தில் மூழ்கியது .

உன் குரலில்...

'கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்! ...'

என்ற வரிகளால் அரங்கு நிறைந்த போது எழுந்தது கரகோசம்.

பெண்மையின் மென்மைத் தடையுடைத்து உன் குரலில் பாரதிதாசனை சபையில் நிறுத்தினாய். எல்லாக் கண்களும் உன்னைத் தானே மொய்த்தன. ஆனால் உன் கண் வீச்சுக்குள் நான் தானே இருந்தேன்.

நாட்கள் செல்லச் செல்ல மதுக்காரம் தெளித்த உன் பார்வை எனக்கு சுவையூட்டியது. கிடப்பில் போட்ட அலுவலகக் கோப்புக்கள் போல பதின் மூன்று வயது வரை சிவனே எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கும் ஹோர்மோன்கள் மெல்ல மெல்ல நிறம் நிறமான சுவாரஸ்யங்களை தேடி அலைவது தான் காதல் என எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால், இருவரும் தோற்கடிக்கப்படும் போதெல்லாம் மீண்டும் அந்த தோல்விக்காக ஏங்கும் இரகசிய ஆட்டம் காதலில் மட்டும் தான் என உணரும் காலத்தில் இப்போ நீ அருகில் இல்லை. என் மீது உனக்கு ஈர்ப்பு இருந்தது என அறிய மாரியம்மன் கோயில் பூசாரியிடம் பூப் போட்டா பார்த்திருக்க வேணும்?

உன் கூட வரும் இரட்டை வால் குருவி உன்னையும் என்னையும் மாறி மாறி பார்க்குமே அது ஒன்று போதாதா? ஆனாலும் வெட்கம் விட்டு காதல் பேச எனக்கு வயது இன்னும் வேண்டியிருந்தது. உன் தைரியம் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை. நீறு பூத்த காமத்தை புரிய வைக்க சூடான மூச்சும், கீழ்க் குரலும் போதும் என்றாகிப் போன பின்னும் அலிபாபாவின் குகைக் கதவுகள் திறப்பது போன்று பளிச்சென உன் மனதை வார்த்தைகளாக எதிர்பார்த்தது எவ்வளவு முட்டாள்தனம்?

One woman always full woman ('ஒரு வுமன் எப்பவுமே ஃபுல் வுமன் தான்'.)

இதை உணர எனக்கு காதோரத்தில் முதல் வெள்ளை முடி தலை காட்ட வேண்டியிருந்தது.

ஒரு நாள்.

நேற்று இரவு கனவு வந்தது என்றேன்.

அதில் நான் வந்தேனா? நீ கேட்டாய்.

நீயில்லாம கனவு வருமா என்றேன்.

செவியோர கூந்தலை சரி செய்தபடி... மேற் கண்ணால் என்னைப் பார்த்தாய்.

உன்னோடு கூட வருமே இரட்டை வால் குருவி அதுவும் ஓரமாக நின்றது என்றேன்.

அவள் வந்தாலே ஒரு கிளு கிளு வாசனை எனக்குள் தொற்றிக்கொள்ளும். வரும் போதெல்லாம் யார்ட்லி வாசனையில் என் இதயத்தைக் கையிலேந்தி நீராட்டுவாள். அந்த வாசனைக்கு அடிமை ஓலை எழுதிக் கொடுக்கலாமா என உள்ளூர எண்ணத் தோன்றும்.

இன்னும் கொஞ்சம் அவளருகே நெருங்கி அந்த நறுமணத்தால் சுவாசத்தை நிறைத்திருக்கலாமோ என நான் உன்னிடம் சொன்னபோது பலமாக என் கையை கிள்ளிவிட்டு சீ உன் புத்தி இப்படியும் போகுமா எனக் கேட்டாய்.

அந்த யார்ட்லி வாசனையை விட்டா அவசுத்தமா தண்ணி தெளிக்க வேண்டியவ தான் என நான் அலட்சியமாக கூறிய போது உன்முகத்தில் அழகான சிணுங்கல் ரேகை கண்ணோரமாகப் படர்ந்தது.

ஆண்கள் உண்மை பேசும்போது அழகாக இருப்பார்கள் என்றாய்.

So dynamic (ஸோ டைனமிக்.)

திருட்டுத்தனமாக ரசித்தேன்.

நீ அறிமுகம் செய்து வைத்த உன் military (மிலிட்ரிக்கார) அப்பப்பாவை நினைத்துக்கொள்வேன். ஒரு BA (பீஏ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு வேலையில்லா BA (பீஏ) யைத்தான் உருவாக்குவான், ஒரு நாட்டையல்ல என ஒற்றை வரியில் கல்வித்துறையை போட்டுடைத்த military man (மிலிட்ரிக்காரன்) அவர். அவ்வளவு வெறுப்பு பீஏ கல்வியின் தரத்தில் மாத்திரமல்ல, என் தகுதியிலும் அவருக்கு இருந்தது. ஒருவேளை உன்னோடு நான்... அந்த அச்சம்

Military (மிலிட்ரி) இதயத்தில் இருந்திருக்கும்.

ஒரு சொடுக்குடன் இதயத்தை தூதனுப்ப 'தொடு திரை' இல்லாத காலம். என் இறுதித் தேர்வுடன் எங்கும் இருள். எதிலும் அடக்குமுறை; நாளும் போர். இதயத்தை உறைய வைக்கும் வெடியோசைகள்; கரும்புகை. கோரப் பசி கொண்டலையும் ஓநாய்களின் boots (பூட்ஸ்) சத்தங்கள். இருந்தும் எங்கள் அறுந்து போன உறவுக்காக பிரார்த்தனையுடன் நாளும் காலைப் பொழுதை எதிர்கொள்வேன். உன் சந்திப்புக்காக போராடினேன். தோல்வியில் மீண்டு, மீண்டும் தோல்வியில் விழுந்துகொண்டிருந்தேன்.

ஒரு நாள் நண்பனின் அழைப்பு. தோல் பைக்குள் இரண்டு உடைகள் அத்துடன் மறக்காமல் உன் ஓவியச் சுருளையும் அடைத்துக்கொண்டு நண்பனின் நான் அறியாத ஊரில் தரையிறங்கினேன். ஓக் மரக் காடு இளந்துளிர்களுடன் அழகாக இருந்தது.

மொழித் தடை உடைத்து வேலை தேடினேன். வெறுப்பின் எல்லையில் ஒரு நாள் அந்தக் காலத்து பிரிட்டிஷ் கடற்படை சமையற்காரன் போல தலைமுடியை ஒட்ட வெட்டி முகத்தை உம் என்று வைத்து எடுத்த படத்துடன் வேலை கேட்டு எழுதினேன். அழைப்பு வந்தது. போனேன். அங்கே எங்கும் ஹுஸிமிவி (பூட்ஸ்) சத்தம். எல்லோர் முகத்திலும், உடலிலும் ஒருவித விறைப்பு.

நேர்காணலில் இரண்டு தடியன்களுடன் ஒரு பெண்ணும் இருந்தாள். சிரித்தால் நீ அழகாய் இருப்பாய் என்றாள். கஞ்சத்தனமாகச் சிரித்தேன். சிரிக்காமலே இரு என்றாள். அவள் காலிலும் boots (பூட்ஸ்) இருந்தது. இது அவள் உத்தரவு என புரிந்துகொண்டேன்.

சில வாரங்களில் அந்த அலுவலகத்தில் இருந்து பணி ஆணை கிடைத்தது. இன்னும் அதே அலுவலகத்தில் தான் ஆனால் ஒழுங்காகக் குப்பை கொட்டுகிறேன்.

உன்னோடு கழித்த அந்த ஒவ்வொரு நினைப்புக்களும் நீர்மூழ்கிக்கப்பல் போல அடிமனதில் சலனமின்றி இன்னும் ஊர்ந்துகொண்டேதான் இருக்கின்றன.

நீ இறுதி ஆண்டு. நான் மூன்றாம் ஆண்டு. உன்னைப் பிரியப் போகும் இறுதி நிமிடங்களில் அகதா கிறிஸ்டியின் நாவல் போன்று திக் திக்கொன தடலை உசுப்பிக்கொண்டே இருந்தாய். என் உடல் விசும்புவதை எனக்குள் மறைத்துக் கொண்டு பேச முயல்கிறேன்.

ஏய்! உனக்கு என்னாச்சு? ஏன் இப்படி ஒவரா டல்லடிக்கிறே எனக் கேட்டுக்கொண்டே என் தோள் மீது கை வைத்தாய்.

எல்லா சிலமும் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணின் தொடுகையாக எண்ணிக் கொண்டே உன் விரல்களைப் பற்றினேன்.

ஒரே நேரத்தில் குளிர்ச்சியையும் வெப்பத்தையும் ஹோர்மோன்கள் இதமாக வாரி இறைத்தது.

அப்படியே நெகிழ்ந்து உன்மீது படர்ந்து, உன் உயிரோடு கரைந்து விடுவோமோ என்றிருந்தது.

ஆனால், நூறு நிலவுகளின் வெளிச் சத்தில் தெருவெல்லாம் சனக்கூட்டம் மிதந்துகொண்டிருக்க நானும் நீயும்... 'ம்'.

ஓடிப்போய் உனக்குப் பிடித்த 'சித்திரப் பாவை'யை வாங்கி உன்னிடம் கொடுக்க இரண்டு சட்டைப் பைகளை யும் கையைவிட்டு தேடுகிறேன். ஒரு உருபா இருபத்தைந்து சதங்கள் இன்னும் குறைவாகவே இருந்தது. இளமையில் கொடிது மாணவ வறுமை.

எங்களுக்குள்ளும் இருந்தது அமரா வதியின் அதே தவிப்பு, அதே தாபம், அதே வெட்கம், அதே சில்மிஷங்கள் மட்டுமல்ல, அதே கள்ளத்தனமும். இப்போ அதே பிரிவுத்துயர் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அத்தியா யமாக கழித்துக்கொள்கின்றேன். எதிர்ப் படும் பெண்களை எல்லாம் வெற்றி கொள்ளத் துடித்துக்கொண்டே இருந்த என் இதயம், உன்னால் இடம் மாறியது.

இப்போது புரிகின்றது 'தவிப்புத் தானே காதல்'.

Let me not to the marriage of true minds

Admit impediments. Love is not love

Which alters when it alteration finds

இது சேக்ஷ்பியர் என்பது உனக்கு தெரியாததா?

எழுது.

தவிப்பில்

நான்.

## நம்மட முற்றம் வாசகர்களுக்கு

## வணக்கம்.

முனைவர் க.சரவணபவன் அவர்கள் எழுதிய "என் சித்திரப்பாவைக்கு" எனும் கடிதம் தொடர் கடிதமாகும். இந்த தொடர் கடிதத்தில் இதனைப் படிக்கும் நீங்களும் இணையலாம். கடிதத்திற்கு பதில் எழுதுபவர்களாக நீங்கள் ஏன் இருக்கக் கூடாது? எழுதுங்கள்..... அடுத்த இதழில் உங்கள் கடிதம் பதிலாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடுத்த சிக்கல், P.L.O.!

தொடர்
7

மொசாத் இப்படி உகண்டாவுக்குள் நுழைவதற்கு மற்றுமோர் பெரிய தடையும் இருந்தது. அது பி.எல்.ஓ. எனப்படும் பாலஸ்தீன விடுதலை இயக்கம். அந்த நாட்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை வெளிநாடுகள் பலவற்றில் தொடர்ச்சியாகச் செய்து கொண்டிருந்தது. அதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் போராளிகள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்

அப்படியான பயணங்களுக்கு பாலஸ் தீன விடுதலை இயக்கம் அந்த நாட்களில் நுழைவாயிலாகப் பயன்படுத்திய விமான நிலையம் எது தெரியுமா? இதே என்டபே விமான நிலையம்தான்!

என்டபே விமான நிலையத்தினூடாக உள்ளே நுழையவும், அதனூடாக மற்றய ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்லவும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கு இடி அமீன் முழுமையான அனுமதி வழங்கியிருந்தார். அதைவிட உகண்டா வுக்கு உள்ளே பாலஸ்த்தீன விடுதலை இயக்கத்துக்கு ஓர் இரகசியத் தலைமை அலுவலகம் அமைக்கவும் இடி அமீனால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாருடைய வீடு அது ?

உகண்டாவுக்குள் அமைக்கப்பட்டிருந்த இந்த இரகசியத் தலைமை அலுவலகம் பற்றியும் அனேகருக்குத் தெரியாத ஒரு சுவாரசியமான தகவல் உண்டு. 1972ல் இடி அமீன் இஸ்ரேலுடன் உகண்டாவுக்கு இருந்த அரசுகளுக்கிடையேயான தொடர்பு களையெல்லாம் துண்டித்துக் கொண்டார். இஸ்ரேலியத் தூதரகத்தையும் உகண்டாவிலிருந்து வெளியேற்றினார். அப்போது இஸ்ரேலியத் தூதுவர் உகண்டாவில் தங்கியிருந்த வீட்டையும் தம்வசம் எடுத்துக் கொண்டார் இடி அமீன். அந்த வீட்டைத்தான் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இரகசியத் தலைமையகமாக உபயோகிக்கக் கொடுத்திருந்தார். அந்த வீட்டில் இருந்துதான் இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கான உத்தரவுகள் போய்க்கொண்டிருந்தன. இந்த விபரம் அமெரிக்க உளவுத்துறை (CIA) மூலமாகவே மொசாத்துக்குத் தெரிய வந்திருந்தது. இப்படியாக பாலஸ்தீன ஆட்கள் அங்கிருப்பது, மொசாத்துக்கு அடுத்த சிக்கலாக இருந்தது. மொசாத் உகண்டாவுக்குள், அதுவும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் வந்துபோகும் என்டபே விமான நிலையத்தில், அதிரடித் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை திட்டமிடுகிறது! சூழ்நிலை கொஞ்சம் தந்திரமானதுதான்.

### விமான நிலையத்தில் ஊடுருவல்

மொசாத் உகண்டாவுக்குள், அதுவும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் வந்துபோகும் என்டபே விமான நிலையத்தில், அதிரடி நடவடிக்கை (ஆபரேஷன்) ஒன்றை திட்டமிடுகிறது! சூழ்நிலை கொஞ்சம் தந்திரமானதுதான். தாக்குதலைத் திட்டமிடுவதற்கு முன், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் இன்னமும் அந்த வீட்டிலிருந்து இயங்குகிறார்களா என்பது பற்றிய உளவுத் தகவல் டேவிட் கிம்சேயுக்கு முதலில் தேவைப்பட்டது.

ஏனென்றால் அந்த வீடு என்டபே விமான நிலையத்துக்கு அருகில் இருந்தது!

விமானத்தில் கொண்டுவந்து இறக்கப்படும் இஸ்ரேலிய அதிரடித் தாக்குதல் வீரர்கள், என்டபே விமான நிலையத்தில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்துவதே திட்டம். அப்போது, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரும் விமான நிலையத்துக்கு அருகிலுள்ள அந்த வீட்டில் இருந்தால் நிலைமை சிக்கலாகும். அவர்களிடம் இருந்து ஆயுத ரீதியான எதிர்ப்புக் கிளம்பலாம். அதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் செய்துகொள்ள வேண்டும். இந்த விபரங்களை அறிய என்ன விலைகொடுத்தாவது மொசாத்தின் உளவாளிகளை உகண்டாவுக்குள் அனுப்பியே ஆகவேண்டும்.

### இரு உளவாளிகள் ஊடுருவுகின்றனர்

டேவிட் கிம்சே இதற்காக இரண்டு மொசாத் உளவாளிகளை உகண்டாவுக்குள் நுழைவதற்குத் தயார் செய்தார். அவர்கள் இஸ்ரேலில் இருந்து முதலில் கென்யாவுக்கு அனுப்பப் பட்டார்கள்.

கென்யா சென்றடைந்த அவ்விரு உளவாளிகளும் அங்கிருந்து உகண்டாவுக்குள் ஏரி ஒன்றின் ஊடாகவே ஊடுருவுவது என்று திட்டமிடப் பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி கென்யா விலிருந்து யாருக்கும் தெரியாமல் படகு ஒன்றின் மூலம் விக்டோரியா ஏரியில் (Lake Victoriya) பயணம் செய்து உகண்டாவுக்குள் நுழைந்தார்கள்.

இதிலுள்ள மற்றொரு முக்கியமான விடயம், இரு உளவாளிகளின் இந்த ஊடுருவல் கென்யாவின் உளவுத் துறைக்குத் தெரிந்தே நடைபெற்றது.

உண்மையில் படகு மூலமாக உகண்டாவுக்குள் நுழையும் ஆலோசனையை இஸ்ரேலிய உளவுத் துறை மொசாத்துக்குக் கொடுத்ததே கென்யாவின் உளவுத்துறைதான். அத்துடன் இன்னும் ஒரு படிமேல் சென்று இரு மொசாத்தின் உளவாளிகளையும் அந்தப் பாதையூடாக உகண்டாவுக்குள் அழைத்துச் செல்ல கென்யாவின் பாது காப்புப் படை அதிகாரி ஒருவரையும் கூடவே அனுப்பி வைத்திருந்தது கென்ய உளவுத்துறை.

எண்டபே பகுதிக்குள் இந்த மூன்று பேரும் ஊடுருவி, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று பார்த்தால், அந்த வீட்டில் யாருமே இருக்கவில்லை!

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர், உகண்டாவில் இருந்து தங்களது நடவடிக் கைகளையெல்லாம் அங்கோலா நாட் டுக்கு நகர்த்திவிட்டார்கள் என்ற விபரம் அதன் பின்னரே மொசாத்துக்குத் தெரியவந்தது.

ஒரு தடை நீங்கியது. அதிரடித் தாக்குதலின்போது விமான நிலை யத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தின் எதிர்ப்பை எதிர்கொள்ளத் தேவை யில்லை. இந்த இடத்தில், இவர்களுக்கு எதிர்பாராத நல்ல வாய்ப்பு ஒன்றும் கிடைத்தது..

பாதுகாப்பு அதிகாரியின் உறவினர் இரண்டு மொசாத் உளவாளிகளுடன் சென்றிருந்த கென்யாவின் பாதுகாப்பு அதிகாரிக்கு உகண்டாவில் நல்ல தொடர்புகள் இருந்தன. அந்தத் தொடர்புகள் மூலம் தகவல் சேகரித்ததில் அவரின் மனைவியின் உறவினர் ஒருவர் விமான நிலையத்தில் பணயக் கைதிகளை காவல் காக்கும் பணியில் இருப்பது தெரிய வந்தது.

குறிப்பிட்ட இந்த உறவினருடன் பேசிய கென்யப் பாதுகாப்பு அதிகாரி, தங்களை எப்படியாவது எண்டபே விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

ஆனால் அது ஆபத்தான விளையாட்டு என்று அந்த உறவினர் மறுத்துவிட்டார். அதற்கான கரணியம், இரு இஸ்ரேலிய உளவாளிகளையும் அவர்களது உருவத் தோற்றத்தை வைத்தே கடத்தற்கார்ரகள் சுலபமாக அடையாளம் கண்டு கொள்வார்கள்.

**மாற்றுத் திட்டம்**

இஸ்ரேலிய உளவாளிகள் இருவரை யும் பாதுகாப்பான இடம் ஒன்றில் விட்டுவிட்டுத் தன்னை மாத்திரம் தனியே எண்டபே விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டார் கென்யப் பாதுகாப்பு அதிகாரி.

இதில் சிக்கல் ஏதும் இருக்காது. உகண்டா நாட்டவருக்கும் கென்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டவருக்கும் உருவ அளவில் பெரிதாக வேறுபாடு வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. இதற்கு அவரது உறவினர் ஒப்புக்கொண்டார். அவருடன் இவரும் ஒரு காவல் காக்கும் உதவியாளர் என்ற தோற்றத்தில் என்டபே விமான நிலையத்துக்குள் நுழைந்து விட்டார்.

அங்கே நோட்டமிட்டதில் பணயக் கைதிகள் அனைவரும் உயிருடன் இருப் பதை இவர் கண்களால் பார்த் தார். அத்துடன் என்டபே விமான நிலையத்தில் செய்யப்பட்டிருந்த காவல் ஏற்பாடுகளையும் இந்தப் பாது காப்பு அதிகாரி மனதில் பதிவு செய்து கொண்டார்.

மொத்தம் 15 பேர் பணயக் கைதி களைக் காவல்காக்கும் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் இப்படியான வேலைகளுக்கே புதியவர்கள் என்பது நன்றாகவே தெரிந்தது. இந்தப் புதியவர்கள் சுடுகலன் களை முன்பின் இயக்கிப் பழக்கமில்லாத ஆட்கள் என்பது அவர்கள் சுடுகலன்களை மிரட்சியுடன் பிடித்திருந்ததில் இருந்தே தெரிந்தது.

சுடுகலன்களை பிடிக்கத் தெரிந்த மற்றயவர்களும் அவ்வளவாகப் பட்டறி வாளர்களாக இல்லை. அவர்களும் நகத்தைக் கடித்தபடி பயத்துடனும் பதட்டத்துடனும் காணப்பட்டார்கள். இந்தத் தகவல்கள் தகவல் தொடர்பு கருவிகள் மூலம், இஸ்ரேலிலுள்ள மொசாத் தலைமையகத்துக்கு தெரிவிக்கப் பட்டது.

இதே நேரத்தில் கென்யாவுக்கு முதன் முதலில் போய் இறங்கிய ஆறு மொசாத் உளவாளிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை **அடுத்த தொடரில் பார்க்கலாம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகைத்தலை ஒழிப்போம்!

ஈச்சையூர்ச் சிவா.

விரல் இடுக்குகளில்
விருப்புடன் நீ
மூட்டும் தீ...
உனக்கு நீயே மூட்டிக் கொள்ளும்
இறுதித் தீ!

புகைத்தல் என்பது
நகைத்தல் அன்று

நூற்றுக் கணக்காய்
நச்சு இரசாயனம்.....
உள்ளே இழுத்து உறைய வைக்கிறாய்!

மூச்சுக் காற்றை விலைக்கு வாங்கும்
பெருந்துயர் இனிவரும்...
பேதை மனிதனே
அறிவாய்!... உணர்ரவாய்!...

விற்பனையாளரின் விளம்பரம் நம்பி
நீ வீரியம் இழப்பாய்!
விந்தினை இழப்பாய்!

பேனாவை இரவல் கே
கட்கும் உன் பிள்ளை
பெரும்பணம் கொடுப்பாய்
சிகரட்டுக்காய்!
உதட்டைக் கருக்கி உடலைக் கருக்க
உன்னைத் தூண்டியது
நண்பனா?... எதிரியா?...

நெஞ்சம் இருப்பவர் எவரும் இங்கு
இன்னொரு நெஞ்சத்தை
நசுக்க மாட்டார்!
வாழும் சவாலில் மனிதம் திண்டாடும்
மாழும் சவாலில்
உனக்கென்ன மண்டாட்டம்?...

பாதிப் புகையை வெளிவிடும்போது
பக்கத்தில் இருப்பது
மனைவியா?... குழந்தையா?...

மெல்லக் கொல்லும் விசத்தை
நீயும் விலை கொடுத்து
நிதமும் வாங்கி
நேசித்து வாழும் நெஞ்சங்களை நீ
கொல்ல நினைப்பது
சரியா?... தவறா?...

சிகருட்டுக்காய்ச்
செலவழித்த நோட்டை
குழந்தையிடம் கொடுத்து
நீ சேமிக்கச் சொல்லிப்பார்
எத்தனை வெளிச்சம்!...
எரிக்கும்போது இருப்பதை
விடவும் பன்மடங்காகும்!...
இருட்டை ஒழிக்கும்
இழப்பைத் தவிர்க்கும்
பேரப்பிள்ளை
முறைசொல்லி அழைக்கும்!

இன்றே உறுதிகொள்
இனிமேல் வேண்டாம்!...
நன்றே நடக்கும் நம்பியே வாழ்வாய்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடலை ஞானம்

## பிரம்மியா சண்முகராஜா

காலை நாளேட்டில் கூட முதல் பக்கத்தில் புகைப்படமாக "சிதைந்த உடலுடன் தொடருந்து விபத்து." நேற்று காலையில் கூட ஏதோ அவனை பார்க்கும் போது மனதில் எப்படியும் இவனை நல்வழிப்படுத்த உதவிட சந்தர்ப்பம் கிடைத்துவிட வேண்டும். என கடவுளிடம் வேண்டியிருந்தார் வீரராகவன். அவனைப் பற்றிய செய்தி களை நளேட்டில் பார்த்துப் பெருமூச்சு இரைத்தபடி அதன் மிகுதி பக்கங்களை வெறுமனே புரட்டிப் பார்த்துவிட்டு அதில் செய்திகள் எதுவும் பதிப்பிடப்படாதது போல வெறுமை தென்பட நாளேட்டுடனான ஆழமான சிந்தனையை ஒரு வழியாய் விடுவித்து, குளித்து, வெள்ளை நிற மேலாடை ஒன்றைத் தேடி எடுத்துப் போட்டுக் கொண்டு, தனது மிதிவண்டியை எடுத்துக்கொண்டு ஆயத்தமானார்.

தெருவோரம் எங்கும் நீளமாக காத்திருந்தது இருபுறத்திலும் அடுக்கி வைக்கப்பட்ட வாகனங்கள். அதன் ஓரம் வேப்பமரத்து நிழல் ஒன்றின் கீழ் தன் வண்டியை நிறுத்திப் பூட்டிக் கொண்டார் வீரராகவன்.

ஊர் முழுவதும் நிறைந்த காற்றில் வைரமுத்துவின் மரணக் கவிதை ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க! கண்கள் நிறைந்திட வந்தவர் வாழ்க! என வாழ்த்தி இசையாகிக் கொண்டிருந்தது.

ஏமாற்றங்களுடன் வீரராகவன். எத்தனை முயற்சிகள் செய்திருப்பார். எல்லாம் தோற்றுப்போனபின் இதுதான் இசையா? காற்றோடு போவது தான் வாழ்வா? என்று நிசப்தமான இதய உரையாடலுடன் நடந்தார். ஆங்காங்கே கூடி பரந்திருந்தவர்கள் மற்றும் வெற்றிலைத் தட்டங்கள் இன்னும் அமர அழைத்து அடுக்கி இருக்கும் நாற்காலிகளின் வரவேற்பு அழைக்கா விருந்துகளில் இதுவும் ஒன்று. கண்ணீராக இங்கு சுவைக்கப்பட பார்வைகள் விழிகளில் பரிமாறப்படும் விருந்து. சுடலை ஞானப் போசனம். அதில் கலந்து கொள்ள அண்டை மக்கள் கூட்டம்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபெருக்கிக்கு சவால் விடுத்த அவள் ஓல நெடில் காதுகளை இரைத்துக் கொண்டிருந்தது.

வீரராகவன் அந்த உயிர் மூச்சை காற்றில் கலந்து, கண்ணொளியை சூரியனுக்குத் தாரைவார்த்து, பொன்னுடலை மண்ணுக்குத் தர, மடல் மூடி உறங்கிக் கொண்டிருக்கும் தன்மாணவன் மாறனின் உடல் சயனத்தின் ஓரமாய் கடந்து வந்தார்.

தாமரைச்செல்வி அவன் தாய். தலையை உடைத்து தன் மகனுக்கு அபிஷேகிக்கலாம் என்று அடித்து, அடித்து முயற்சி செய்து மூச்சடைத்து அலறிக் கொண்டிருந்தாள். அங்கே அஞ்சலிக்காய் வீரராகவன். அவள் தாமரை வீரராகவனின் வருகையில் இன்னும் துயர் தூண்டப்பட்டவளாகி அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு, ஐயோ! சாமி நீங்க தல தலயா அடிச்சிங்களே? இவன் நல்லா படிக்கணும் என்று, நல்லவனாக வாழ வேண்டும் என்று எவ்வளவோ சொன்னீங்களே!

செல்லமா வளர்த்த பிள்ளை தானே என்றுதான் உங்களையும் அவமானப்படுத்தி போட்டேன். ஐயா நீங்க இரண்டு அடி போட விட்டு இருந்தால் இப்போ என்ர மகன் என்ன விட்டு போயிருக்க மாட்டானே?

ஐயோ! படுபாவிகள் இவனைக் கொண்டு போட்டாங்களே!

ஐயா என்ர புள்ளதொடருந்தில விழுந்து சாகல்ல. ஆரோ குடிகாரன், குடுக்காரன் தள்ளி விட்டுட்டான் ஐயா. தள்ளி விட்டுட்டான்.

நீங்க சொல்ல கேட்கலையே என்ர ராசா? இப்ப என்ன செய்யப் போறேன்? என்ர புள்ள ஒத்த புள்ள எனக்கு கொள்ளி வைக்க யாரு இருக்கா? பார்த்து பார்த்து வளர்த்தேன் ஐயா! என்ன செய்வன். ஏன் அவனை பார்க்க வந்தீங்க?

அவன் உங்க பேச்சு கேட்கலையே என்று அலறி அடித்து பேரிச்சலுக்கு குமுறினாள் தாமரை.

வீரராகவன் அடக்கி அமர்த்திய கண்ணீர் அவன் ஆண்மை ஆசிரியத்துவம் எல்லாவற்றையும் கட்டுடைத்து வடிந்தது. தாமரை அவனைவிட இரண்டு வயதில் மூத்தவள். ஆனாலும் அவள் ஒரு பெண்மணி என்பதினாலும் துயரத்தில் இடம் அறியாமல் தன் பெண்மையை மறந்து ஒற்றைப் பிள்ளையை பறிகொடுத்த தாயாய் அவன் கால்களை இறுக்கிப்பிடித்தபடி அவனிடம் மன்னிப்பு கேட்பதாய் மண்டியிட்டு அழுது கொண்டிருப்பதை புரிந்து கொண்ட பின்னும் தொட்டு ஆறுதல் செய்யவில்லை. அது பெண்ணியக் கனப்படுத்தல் பண்பாடு. அப்படியே பக்கத்தில் இருந்த பந்தல் காலை இரண்டு கைகளாலும் இறுக்க பிடித்து மலைத்து போய் இருந்தார் வீரராகவன்.

மாறனின் தந்தை கனரக வாகன சாரதி. இடைவேளையில்லா இயந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கும் அவர் பற்களின் வண்ணத்தையே வெற்றிலை காவி மாற்றியிருந்தது.

அதன் இடுக்குகளில் கூட இன்னும் மிகுதித்துகள்கள் செருகியிருந்தது. அவர் தாமரையைத் தட்டி போதும் விடு என வீரராகவரை விடுவித்து கண்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்ட முற்று, வெட்கி, பறிபோயிட்டான் ஐயா என்ர புள்ள... அவள் விட்டதை தொடர நினைத்தும் பேச முடியாதவராய் அருகிருந்த இருக்கையில் அமர்த்தி விட்டு என்ன மன்னிச்சிடுங்க ஐயா என கும்பிட்டு கண்ணீர; சிந்தினான் மணியம். வீரராகவர் பதில் இன்றி அவர் கைகளை இறக்கி விட்டு தோள் தட்டி தேற்றினார்.

எதை சொல்வது? நான் சொல்ல கேட்கவில்லை என்று திமிர் கொள்ள அவருக்கு தெரியாது. அழ வேண்டாம். கவலைப்பட வேண்டாம். என்று சாதாரணமாக தேற்றுவதும் அர்த்தமற்றது. அமைதியைத்தான் பதிலளிக்க முடியும். அத்தோடு தான் எதனையும் மனதில் வைக்கவில்லை. அவன் பிரிவு எனக்கும் ஆற்றொண்ணா துயரம் தான் என்று நிறைந்த கண்களின் ஈரத்தினால் பேசி அமர்ந்தார்.

அன்று மாறன் வழக்கம் போல் பாடசாலைக்கு பிந்தியே வந்திருந்தான். ஆனாலும் அவன் கண்களில் ஒருவித தூக்க மயக்கம். கைகளில் இனிப்புகளுடன் அதிபரின் அறையில் தண்டனைக்காக நிறுத்தப்பட்டிருந்தான். அந்த வழியே வந்த வீரராகவன், அவர் பாடசாலை ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர். பார்ப்பதற்கு பெயரைப் போன்று வீரத் தோற்றம் ஒன்றும் அவரிடம் இல்லை. மிகவும் மென்மையானவர். மெலிதான உடல்வாகு. உயரம் நடுத்தர மானவர். அவர் நிறத்தில் கொஞ்சம் கருமை அடர்த்தியானவர் என்பதனால் சற்றுமிடுக்காகத் தெரிந்தார். எப்பொழுதும் கைகளில் கிளுவை மரத்தடிகளுடன் தான் அவரை காண முடியும். "பாம்புகளை அடிப்பதற்கு இதை பயன்படுத்துவார்களாம். வேலிகளில் அதிகம் இந்த கிளுவைகளை காணலாம். இது பாம்பிற்கு நச்சுத்தன்மையானதாம்" தடியோடு திரிவது வழக்கமான வீரராகவன் சித்திரத்தில் சிங்கம் போன்றவர். ஒருநாளும் எந்த மாணவ னையும் அடித்ததே இல்லை.

அன்று மாறன் அவர் கொள்கைக்கு சவாலாய் வந்தான். என்ன மாறன்;? ஏன் வகுப்புக்கு போகவில்லையா? ஒரு மாதிரியாய் இருக்கிறாய் என்று அவனை தொட்டுப் பார்த்தார்.

மாறன் அவர் கையை வேகமாக ஆத்திரத்தோடு தட்டி விட்டான். ஆச்சரியப்பட்ட வீரராகவன் புரிந்து கொண்டார். சரி நீ ஏதோ குழப்பமாக இருக்கிறாய் நான் அதிபரிடம் பேசி உன்னை வகுப்புக்குள் அனுப்புகிறேன் என அலுவலகத்தில் சென்று அதிபரிடம் அவனை தான் கவனிப்பதாக வாக்குறுதி அளித்தார். அவரோடு பேச அவன் அனுமதிக்கவில்லை. கடுகடுத்தான். மறுநாளும் இது போலவே தாமதமாய் வந்திருந்தான்.

வீரராகவன் அவனை அவதானித்தார். இவனது நண்பர்கள் பற்றி இவனது போக்குகள் வரத்துகள் பற்றி கண்காணித்தார். அவனுக்கு மறைமுகமாக நேரடியாக பல்வேறு புத்திகளையும் சொன்னார். ஒருநாள் அவர் தாமரை செல்வியை அழைத்து மாறனின் போதைப் பழக்கம், போதை வியாபாரிகளுடன் உள்ள நட்பு எல்லாவற்றைப் பற்றியும் அவளுடன் பேசினார். அவள் அமைதியாய் கேட்டாலும் என்ர புள்ள அப்படி செய்ய மாட்டான். என அசட்டையாய் எடுத்துக் கொண்டாள். இப்படி வீரராகவனின் முயற்சிகள் பல மாறனோடு இருந்தது. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் மாறன் வீரராகவன் தன்னை பார்க்க வேண்டும் என்றும், இவர் என்னத்தை செய்யப் போகின்றார் என்றும், அவரை அவமதிக்கும் எண்ணத்தில் அவருக்கு முன்பதாகவே போதையை புகையாக முகர்ந்து இழுத்து கையைத் தட்டி விட்டு வகுப்புக்குள் சென்று கொண்டிருந்தான். ராகவன் பிரம்பும் மனமும் பொறுமையை இழந்து மாறனை கண்டபடி பதம் பார்த்து விட்டது.

அன்று அதிபரும் விடுமுறை. மாறன் அனுமதி இன்றி பாடசாலை நேரத்திலேயே தனது புத்தகப் பைகளை எடுத்துக்கொண்டு ஆத்திரமாக வீட்டுக்கு திரும்பி விட்டான். தரம் பத்தில் கற்பவன் அவன். பாடசாலை விடும் நேரம் ஏதோ அவனை அடித்த சஞ்சலத்திலும், அவன் கோபமாக கடந்து சென்றதை நினைத்தும், மேலும் இந்த நடத்தைகளை எப்படி மாற்றலாம் என்ற சிந்தனையோடும் ஆழ்ந்திருந்த வீரராகவன் தொடர்ந்தும் தனது முயற்சிகளை அவன் நடத்தையை மாற்றி விட வேண்டும் என்ற நோக்கிலே நகரத்தினார்.

அப்போது மாறனின் தந்தை மணியத்திடம் பேசலாம் என நினைத்தார். சாரதி மணியம் அவனும் மது விரும்பி அன்று மணியம் முழுப்போதையில் இருந்தான்.

இதை அறியாமல் அவனை பாடசாலைக்கு வருமாறு அழைத்தார் வீரராகவன். மாறனை கையோடு அழைத்து வந்த மணியம் என்ட புள்ளைய கைநீட்டி அடிக்க நீ யாரடா என பாடசாலையில் அனைவரும் பார்க்க ஓங்கி அறைந்தார். வீரராகவன் அவரது அடிவேகத்தில் பக்கத்தில் இருந்த மதிலில் சாய்ந்து கொண்டார். இப்படி நல்வழிப்படுத்த நினைத்த வீரராகவன் இறுதியில் அவர் மாறனை அடித்த குற்றத்திற்காக தண்டப்பணமும் செலுத்தினார். "என்ன நடைமுறைச் சட்டமோ" ஆசிரியத்துவம் மதிப்பற்று நாளைய தலைமுறை என்னாகுமோ என்ற ஏக்கமே வீரராகவனுக்கு.

வேறு எந்த அவமானமும் அவர் சிந்தைக்குள் நுழையவில்லை. இப்படி நடந்து இரண்டு நாள்கள்தான் இன்று வீரராகவன் என் அவமானங்கள், பொறுமை கூட வீணாகிவிட்டதே. முயற்சிகள் எதுவும் பயன் தரவில்லையே. என்று கவலையில் பக்கத்துக் கதிரையில் இருந்தவரை நிமிர்ந்து பார்த்தார்.

ஓம்மைய்யா இவன் கஞ்சா வித்தத பொலீஸ் பார்த்துட்டானாம். இவன் பிடிபட்டால் பெரிய கைகளும் மாட்டி விடும் என்று இவனைக் கொண்டு போட்டு ரயில ஏறிந்து விட்டார்களாம் என்றார். அம்மா அப்பாவும் செல்லம். அவன் ஒரு புள்ள என்பதுல அவன் நினைத்ததை செய்ய விட்டுடினம் இப்ப பாருங்க.. உங்களுக்கு நடந்ததும் கேள்விப்பட்டேன். மாதா பிதா செய்தது மக்களுக்கு என்றார் அதே வெற்றிலை வாயுடன் அவர்.

அவரைத் தட்டி அப்பா உங்களை வரட்டாம் என்றான் யுகன். அவனும் மாறனின் சாயலானவன். வீரராகவன் மீண்டுதொடர்ந்தார் மற்றவர்களுடன். பாவம் இன்னும் பல அடிகள் நிச்சயம் ஆலோசகருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருள்முதல் வாத விதிகள்

ஒரு ஒளி ஆண்டு (Light Year) என்பது எத்தனை நாட்களைக் கொண்டது?

சமூகத்தில் நிலவும் கருத்தாக்கங்கள் இரண்டே இரண்டின் அடிப்படையில் தான் கட்டி எழுப்பப் பட்டிருக்கின்றன என்பதை உணரலாம். அந்த இரண்டு எவை?

1). கருத்துமுதல்வாதம்
2).பொருள்முதல்வாதம்

கருத்து முதல்வாதம்; பொருள் முதல்வாதம் என்ற இரு பெரும் பிரிவினூடே அனைத்து நாடுகளின் தத்துவப் பிரிவுகளும் ஓய்வு இன்றி செயல்படுவது வரலாறு உறுதி செய்துள்ளது. இவை இரண்டும் தமக்கே உரித்தான சமூக உணர்வு மானிட உள்ளக் கிளர்ச்சியைத் தத்துவார்த்த தரத்தில் மனிதர்களிடையே வளர்ப்பதில் அக்கறை காட்டுகின்றன.

இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை ஏன் கற்க்கிறோம்? ஏனெனில் மற்ற தத்துவங்கள் அறிவியலை புறக்கணித்து நம்பிக்கையை மட்டுமே துணைக்கு வைத்துள்ளது ஆனால் மார்க்சியம் எல்லா அறியல் வளர்ச்சியையும் தன்னகத்தே கொண்டு வளர்வதோடு சமூகத்தில் ஏற்படும் எல்லா சிக்கல்களுக்கும் மார்க்சிய விஞ்ஞானமானது அண்மைகால அறிவியல் வளர்ச்சியோடு தன்னை வளர்த்து கொண்டு அதற்கான பதிலுரைக்கும் திறன் கொண்டது என்றால் மிகையாகாது தோழர்களே.

கேள்வியே தவறானது. ஒளி ஆண்டு என்பது காலத்தைக் கணக்கிடும் அலகு (Unit) அல்ல. அது தூரத்தைக் கணக்கிடும் ஒரு அலகு.

ஒளியின் வேகமானது வெற்றிடத்தில் நொடிக்கு 2,99,792.458 கிலோமீட்டர்கள். தோராயமாக நொடிக்கு 3 இலட்சம் கிலோமீட்டர்கள் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட வேகத்தில் ஒளி ஒரு ஆண்டிற்கு எத்தனை தொலைவு பயணித்திருக்கும் என்று பார;த்தால் அதுவே ஒரு ஒளியாண்டு தூரம் எனப்படும்.

1 நொடிக்கு = 299,792.458 கிலோமீட்டர்கள்

1 நிமிடத்திற்கு = 299,792.458 மு 60 = 17,987,547.48 கிலோமீட்டர்கள்

1 மணிக்கு = 17,987,547.48 மு 60 = 1,079,252,848.80 கிலோமீட்டர்கள்

1 நாளைக்கு = 1,079,252,848.80 மு 24 = 25,902,068,371.20 கிலோமீட்டர்கள்

1 ஆண்டிற்கு = 25,902,068,371.20 மு 365.242 = 9,460,523,256,033.83 கிலோமீட்டர்கள்

அதாவது, ஒன்பது ட்ரில்லியன் நானூற்றி அறுபது பில்லியன் ஐநூற்றி இருபத்தி மூன்று மில்லியன் இருநூற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பத்தாறு ஆயிரத்து முப்பத்து மூன்று (nine trillion four hundred sixty billion five hunred twenty-three million two hunred fifty-six thousand thirty-third) கிலோமீட்டர்கள்.

சுருக்கமாக = 9.4605284 ஷ¬ 1012 கிலோமீட்டர்கள்

தோராயமாக 9.46 ட்ரில்லியன் கிலோமீட்டர்கள் என்பதே ஒரு ஒளியாண்டு தூரமாகும்.

வானவியல் அலகு (Astronomical Unit-AU)

இயக்கவியலை எல்லோரும் புரிந்து கொள்ளமுடியும் காரணம் அது பளிங்கு போல் தெளிவானது மர்மம் புதிர் ஒன்றும் அதில் கிடையாது அதை எல்லோரும் புரிந்து கொள்ள முடியும் என்றாலும் அதில் கஷ்டங்கள் இல்லாமல் இல்லை அதை எப்படி புரிந்து கொள்வது என்று இப்போது பார்ப்போம்.

உதாரணமாக இதில் நாம் கைத்தொழில் எடுத்துக் கொள்வோம் அதாவது தச்சர்கள் ஆரம்பகட்டத்தில் கை கொண்டு உருவாக்கிய பல்வேறு பொருள்களும் இன்று அதனை உருவாக்க பல்வேறு மிஷனரிகள் உள்ளது அதில் அவர்களாகவே சிந்திப்பதை மெசின் செய்யும் உயரிய வடிவம் அல்லது இன்னொன்றை பேசுவோம்...

நமது கைகளும் விரல்களும் வேலை செய்தற்குரிய கருவிகள் சிந்தனையின் ஒரு வேலை செய்தல் பிரிவுதான் மிகவும் நுணுக்கமாக செய்ய வேண்டிய ஒரு வேலையை செய்வதற்குரிய சில சமயங்களில் நம் விரல்கள் திறனற்று இருக்கின்றன..

1).பருப்பொருள் மற்றும் பருப்பொருளும் இயக்கமும்

அ).பொருள் என்பது என்ன? என்று முதலில் பார்க்க வேண்டும் அதன் பிறகு

ஆ).பொருள் எப்படி எப்படி எல்லாம் இருக்கும் என்று பார்க்கவேண்டும்.

முதல் கேள்விக்கு பொருள் முதல்வாதிகள் கொடுக்கும் பதில் தான் பொருள் என்பது புற நிலையில் உள்ள ஒரு எதார்த்தம் அது மனதை சார்ந்திராமல் சுதந்திரமாக இருப்பது மனதில்லாமலே அது இருக்க முடியும். அது இருப்பதற்கு மனம் அவசியமில்லை என்கிறார்கள் இதைப் பற்றி சொல்லும்போது "பொருளைப் பற்றிய கருத்தோட்டம் குறிக்கிறதெல்லாம் நம் புலன்உணர்ச்சிகள் மூலமாக நாம் அறியும் புற நிலை எதார;த்தம் தானே ஒழிய வேறு ஒன்றும் இல்லை" என்று லெனின் கூறினார் (பொருள்முதல்வாதமும் அனுபவஞான விமர்சனமும் என்ற அவரது நூலில் 323 ஆம் பக்கம்).

இரண்டாம் கேள்விக்கு பொருள் எப்படி எல்லாம் இருக்கும் என்ற கேள்விக்கு பொருள் முதல் வாதிகள் என்ன சொல்கிறார்கள் இந்த கேள்விக்கு விடை தர வேண்டியவர்கள் நாங்கள் அல்ல. விஞ்ஞானிகள் தான் இதற்கு விடையளிக்க வேண்டும் என்கிறார்கள். அதாவது பண்டைய காலத்தில் இருந்து தற்காலம் வரை மாறினதே இல்லை என்ற முந்தைய கேள்விக்கான பதிலளிக்கும் பொருள் முதல்வாதிகள் காலத்துக் காலம் மாறிக் கொண்டேயிருக்கிறது, மாறித்தான் தீர வேண்டும் ஏனெனில் அவை விஞ்ஞான வளர்ச்சி யோடு சார்ந்து நிற்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகால அணு கொள்கை அன்மைகால் அணுக் கொள்கை இதனால் பொருள் அற்ற நிலை…

2). விசும்பும் காலமும் (இடமும் காலமும்) (களமும் காலமும்)

அ).பொருள் என்பது இன்னின்ன காலத்தில் இன்னின்ன இடத்தில் இருக்கிற தன்மை பெற்றது என்ற காலத்தையும் களத்தையும் குறித்து வரையறுக்கின்றோம்.

ஆ). பொருள் இயங்கிக் கொண்டே இருக்கும் தன்மை பெற்றது என்று இயக்கத்தையும் குறித்து வரையறுக் கின்றோம். இந்த இரண்டு அம்சங்களும் பற்றி சொல்லும் பொழுது காலம் களம் என்பது நமது மனதில் வைத்து எண்ணங்களே என்று ஆன்மீகவாதிகள் நினைக்கிறார்கள்.

அப்படி அல்ல களம் நம் மனதில் இல்லை நாம் தான் களத்தில் இருக் கின்றோம் என்று பொருள் முதல் வாதிகள் சாதிக்கிறார்கள் நமது வாழ்வு விரிந்து மலரும் காலம் என்பது அத்தியாவசியமான இந்த நிபதனையாகும் ஆகவே நமது மனதுக்கு வெளியே காலத்திலும் களத்தில் நிலைத்துக் கொண்டிருப்பதே பொருள் என்று பொருள்முதல்வாதம் அறுதியிட்டு கூறுகிறது.

"காலம் களம் என்பவை எல்லாம் வாழ் நிலைக்கு ஆதார வடிவங்கள் ஆகும். களத்துக்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்கமுடியும் என்று சொல்வது எவ்வளவு முட்டாள்தனமோ அதேபோல் அதேபோல் காலத்துக்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்கமுடியும் என்று சொல் வதும் முட்டாள்தனமாகும்" என்று எங்கெல்சு கூறுகிறார்.. (டூரிங் மறுப்பு நூலில் 52- ஆம் பக்கம்).

3).உணர்வு

நமது உணர்வைச் சார்ந்திராமலே சுதந்திரமாக ஒரு யதார்த்தம் இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம் . நமக்கு முன்னாலேயே இருந்து வந்தது என்று நாமெல்லாம் நம்புகிறோம் நாம் மறைந்த பிறகும் அது நீடித்து இருக்கும் என்று நாம் நம்புகிறோம். நாம் பிறப்பதற்கு முன்னாலேயே சென்னை நகரம் இருந்தது அதே போல் அது தரைமட்டமாகினலே தவிர நாம் இறந்த பிறகும் அவை இருந்துக் கொண்டுதான் இருக்கும்.

சென்னை பற்றி நாம் சிந்திக்காமல் மறந்திருக்கும் போது கூட சென்னை என்னவோ இருந்து கொண்டுதான் இருக் கிறது என்பது நம்மைப் பொறுத்தவரை சர்வ நிச்சயம். அதைப் போலவே நாம் என்றைக்கும் பார்த்திராத நாம் பயணித்து அறிந்திறாத பல்லாயிரக்கணக்கான நகரங் கள் உலகெங்கும் உள்ளன. அவற்றின் பெயர் கூட நமக்குத் தெரியாது. இருந்தாலும் அவை இருக்கத்தான் செய்கின்றன. ஆகவே விஞ்ஞான வளர்ச்சி ஆன்மீக மாய வாதத்தை குழி தோண்டி புதைக்கிறது.

இயக்கம் என்பது பொருளின் வாழும் தன்மையாகும் வாழ்க்கை முறையாகும். இயக்கமற்ற பொருளைப் பற்றி எப்படிச் சிந்தித்துப் பார்க்கவும் முடியாதோ அதேபோல் பொருளற்ற இயக்கத்தை பற்றி சிந்தித்துப் பார;க்கவே முடியாது" என்கிறார் எங்கெல்ஸ் டூரிங் மறுப்பு நூலில் 70ஆம் பக்கம்.

இன்றைய நிலையில் இருக்கும் பூமியானது ஒரு நீண்ட காலத்திய பரிணா மத்தின் மொத்த விளைவு ஆகும் அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமான ஆனால் இடையறாத இயக்கத்தின் விளைவே ஆகும் என்பது நமக்குத் தெரியும்.

ஆகவே பொருள் இருக்கிறது என்று நிரூபித்துக் காட்டிய பிறகு குறிப்பாக பின்வருமாறு வரையறுக்கின்றோம்.

"இயங்கிக்கொண்டே இருக்கும் பொருளே தவிர உலகில் வேறு ஒன்றும் இல்லை அந்த இயங்கும் பொருள் காலத்திலும் களத்தில் தான் இருந்து இயங்க முடியுமேயல்லாமல் வேறெந்த ரீதியிலும் இயங்க முடியாது" லெனின் எழுதிய பொருள்முதல்வாதமும் அனுபவ ஞான விமர்சனம் நூல் பக்கம் 236.

முடிவாக...

இந்தக் கருத்துகளின் விளைவாக என்ன முடிவாகிறது? கடவுள் என்ற கருத்து "பரிசுத்த ஆன்மா, பரமாத்மா" என்ற கருத்து, பிரபஞ்சத்தை சிருஷ்டித்து கர்த்தா என்ற கருத்து இருக்க சாத்தியமே இல்லை என்று ஆகிறது. ஏனெனில் காலத்துக்கும் களத்துக்கும் அப்பாற்பட்ட கடவுள் என்ற ஒன்று இருக்க முடியாது. காலத்துக்கு அப்பாற்பட்ட இயங்கும் கடவுள் அதாவது எந்த குறிப்பிட்ட காலத்திற்கும் நிலை கொள்ளாத கடவுளை அதாவது அங்கே இங்கே என்று எங்கும் இடம் கொண்டிராத கடவுளை நம்புவது என்றால் மாயையான ஆன்மீக வாதத்தில் வீழவேண்டியதுதான் அப்பொழுது விஞ்ஞானத்தை ஆராய்ச்சிகளை புறக் கணிக்காதிருக்க முடியும்.

இந்தப் பிரபஞ்சத்தை கடவுள் படை திருக்க முடிந்திருக்க வேண்டும் என்றால் இந்த பிரபஞ்சத்தை ஏதோ ஒரு களத்தில் கடவுள் படைத்திருக்க வேண்டும் ஆனால் கடவுளுக்குத்தான் களமே இல்லையே. எனவே சூனியத்திலிருந்து பிரபஞ்சம் பிறந்திருக்க வேண்டும். அற்றது உற்றது என்றாகி இருக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படுகிறது. பிரபஞ்சத்தை யாரோ படைத்தார்கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டுமானால் முதலில் இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பிரபஞ்சம் இருந்திருக்கவில்லை என்றும் அடுத்தபடியாக வெறும் சூனியத்திலிருந்து ஏதோ ஒன்று வெளிவந்தது என்று ஒப்புக்கொள்ள வேண்டும் இது உண்மை யிலேயே விஞ்ஞானப்பூர்வமான தில்லை என்பது நாம் அறிந்ததே.

4) பொருள்முதல்வாத இயக்கவியலின் விதிகள்.

அ). அளவு நிலை பண்பு நிலையாக மாறுதல்

(இயக்க இயல் ரீதியான மாறுதல்)

ஆ). நிலை மறுப்பின் நிலை மறுப்பு (பரஸ்பர வினை)

இ). எதிர் நிலைகளின் ஒற்றுமையும் மோதலும்

(முரண்பாடு)

1). ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்வை தனித்த ஒன்றாகக் காணாமல் அதை ஏனைய வற்றோடு இணைத்து ஒரு முழுமையின் பகுதியாகவும் பல்வேறு பொருள்களோடும் அல்லது நிகழ்வுகளோடும் தொடர்பு கொண்டுள்ள தாகவும் பாதிக்கப்படுவதாக வும் காணல் வேண்டும்.

2). எல்லாப் பொருள்களும் அல்லது நிகழ்வுகளும் எப்பொழுதும் இடையறாது இயங்கிக்கொண்டு இயக்கப் போக்கில் இருக்கின்றன. அவை மாறுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்கின்றன அல்லது சிதைகின்றன.

3). ஒரு பொருளில் அல்லது ஒரு நிகழ்வில் ஏற்படும் அளவு மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில் பண்பு மாற்றமாக உருப் பெற்று வேறு ஒரு பொருளை அல்லது நிகழ்வை தோற்றுவிக்கும்.

4). எல்லாப் பொருள்களுக்குள்ளும் அல்லது நிகழ்வுகக்குள்ளும் முரண்பாடுகள் இருந்து கொண்டே இருக்கும் இந்த முரண்பாடுகளுக்கு இடையில் ஒற்றுமையும் போராட்டமும் எப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கும்.

முதல் விதி.

அ). இயக்க இயல் ரீதியான மாறுதல்

இறுதியானது என்று எதையும் இயக்க இயல் கருதுவதில்லை இதற்கு அர்த்தம் இயக்கவியலை பொருத்தவரையில் நாம் ஆராய்ந்து ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விஷயத்துக்கும் சென்ற காலத்தையும் எதிர்காலத்தையும் சொல்வதாகும்.

எனவே எதுவும் நிரந்தரமானதல்ல அதனுடைய இன்றைய நிலை இறுதியானது அல்ல என்று சொல்வேண்டும்.

ஒரு பொருளையோ ஒரு செயலையோ நீங்கள் ஆராய்ந்த பிறகு அவற்றை இயக்க சக்தியின் விளைவாக ஏற்பட்ட மாறுதல்களை எல்லாம் கண்ட பிறகு நீங்கள் கவனித்து தெரிந்த மாறுதல்களைப் பெற்று சொன்ன பிறகு நீங்கள் மேலும் ஆராய்ச்சி ஆழ்ந்து அந்த மாறுதல் இயக்கத்தில் ஏன் ஏற்பட்டது என்று பரிசோதிக்க வேண்டும்.

இரண்டாம் விதி.

நிலை மறுப்பின் நிலை மறுப்பு

இந்த விதியை பொறுத்தவரையில் எதுவும் முடிவாகவில்லை ஒவ்வொன்றும் ஒரு இயக்கத்தின் முடிவாகவும் மற்றொரு இயக்கப் போக்கில் ஆரம்பமாகவும் இருக்கின்றது ஒவ்வொன்றும் எப்போதும் பார்த்தாலும் மாறிக் கொண்டே இருக்கின்றது வளர்ந்து கொண்டே இருக்கின்றது அதனால் தான் முதலாளித்துவ சமுதாயம் சமுதாயமாக மாறும் என்று அவ்வளவு சர்வநிச்சயமாக கருதுகிறோம் ஏனெனில் எதுவும் இறுதியாக நிறைவுற்ற நிலையை எய்துவதில்லை. அதனால்தான் முதலாளித்துவ சமுதாயம் சோசலிச சமுதாயமாக மாறும் என்று நாம் எவ்வளவு சர்வநிச்சயமாக கருதுகிறோம் ஏனெனில் எதுவும் இறுதியாக நிறைவுற்று நிலையை எய்துவதில்லை.

என்றென்றைக்கும் வளர்ச்சி இருந்து கொண்டேதான் இருக்கும் இதை எல்லாம் கேட்டபிறகு இயக்க இயல் என்பது ஏதோ தவிர்க்க முடியாதபடி நடந்து விடக்கூடிய விஷயம் என்று நினைத்து விடகூடாது.

ஏனெனில் அப்படி நினைக்க நேரிட்டால் என்னாகும் நாம் விரும்புகிற மாறுதல் சர்வநிச்சயமாக ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறோமே?

அப்படியானால் நாம் ஏன் போராட வேண்டும் சும்மா இருந்தாலும் அது வர தானே செய்யும் என்ற முடிவுக்கு வந்து விடுவோம்.

முக்கியமாக கவனிக்கத்தக்கது ஏனெனில் மார்க்ஸ் சொல்கிறது போல் சோஷலிசம் பிறப்பதற்கு ஒரு மருத்து வச்சி இருக்கவேண்டிய அவசியம் அதனால் தான் ஒரு புரட்சி அவசிய மாகிறது.

முன்னே சொன்னது போல் விஷயங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளெல்லாம் அவ்வளவு எளிதானதல்ல இந்த மாறுதல் ஏற்படுவதை தடுக்கவோ துரிதப்படுத்துவோ சக்தி பெற்றிருக்கிற மனிதர்கள் வகிக்கும் பாத்திரத்தை நாம் மறக்கலாகாது (இவை வரலாற்று பொருள் முதல்வாதத்தில் விரிவாக பார்ப்போம்).

ஒவ்வொரு பொருளிலும் விஷயத்திலும் இயக்கப் போக்குகளின் சங்கிலி அமைப்பு ஒன்று இருக்கிறது இந்த இயக்கங்கள் எல்லாம் அந்தந்தப் பொருளின் உள்ளே இயக்க சக்தியின் விளைவாக ஏற்படுகின்ற என்பதை நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கும்.

மூன்றாம் விதி.

3). முரண்பாடு...

பொருள்களும் விஷயங்களும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன இடையறாது பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கின்றன சுருங்கச்சொன்னால் இயற்கையை எவ் வகைப்பட்ட இயக்கத்தில் உருவாகிக் கொண்டே இருக்கின்றன இவை முதல் இது என்று பார்த்தோம்.

ஒரு பொருள் இன்னொரு பொருளாக மாறுகிறது மட்டுமல்ல அந்தப் பொருள் அதாக இருப்பதோடு மட்டுமின்றி அதன் எதிர்மறையாக உள்ள மற்றொரு பொருளாகும் இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் எதிர்மறை அடங்கியிருக்கிறது ஒவ்வொரு பொருளும் தன்னுள்ளே தன்னையும் தனது எதிர்மறையும் அடக்கிக் கொண்டிருக்கிறது.

எதிர்மறையான சாவையும் அடக்கிக் கொண்டிருக்கிறது

முதலாளித்துவ சமுதாயத்திற்கு உள்ளேயே முரண்பாடு இருக்கிறது என்று நாம் பேசுவது என்று அர்த்தம் என்ன?

முதலாளித்துவ சமூகத்தில் எதார்த்த மான சக்திகள் இருந்து போர் புரிந்து கொண்டிருக்கின்றனர் முதலாவது சக்தி தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கும் போக்குள்ள சக்தி

அதுதான் முதலாளி வர்க்கம் அது தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் போக்கிலே போகிறது பிறகு இன்னொரு சமுதாய சக்தி இருக்கிறது அது முதலாளி வர்க்கத்தின் நிலையை மறுக்கும் போக்கிலே போகிறது அதுதான் தொழிலாளி வர்க்கம்

ஆகவே முரண்பாடு என்ற விபரங்களை அடங்கி இருக்கிறது ஏனெனில் தனது எதிர்மறையான தொழிலாளி வர்க்கத்தை உருவாக்காமல் முதலாளி வர்க்கத்தால் ஜீவித்திருக்க முடியாது எல்லாவற்றுக்கும் மேலாக தனக்கு சமாதி கட்டுப்பவர்களை முதலாளிவர்க்கம் உற்பத்தி செய்கின்றது என்று மார்க்ஸ் சொல்கிறார்.

இதற்கு பயன்படுத்திய நூல்கள்

(1).இயக்கவியல் பொருள் முதல் வாதமும் வரலாற்று பொருள் முதல் வாதமும் NCBH தொடக்க நூல்

(2).மார்க்ஸீய மெய்ஞ்ஞானம் தத்துவத்திற்கான ஓர் அரிச்சுவடி- ஜார்ஜ் பொலிட்சர்

(3).முரண்தர்க்கபொருள்முதல்வாதம் என்றால் என்ன? ஒ.யாக்கோத்

(நன்றி - இலக்கைத்தேடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தயாராவே இல்லை

## இரா.அருள்செல்வன்

எந்தையின் உயிர்வெந்து

உழைத்த காசுக்கு
சோறும் வீடும் தேடியெடுத்து

குறைதர வீடுகளில் இருந்து
உயர்தரம் படித்த காலமது

மட வயது காதல்போல்
வாடகை வீடுகள்
எம்மை அடிக்கடி ஏமாற்றும்

வாடகை வீடுகள்
எம்மை ஏமாற்றும் போதெல்லாம்
ஆறுதலளிக்கும் அன்ன சத்திரமாய்
நண்பன் வீடு
எமக்காய் இருக்கும்

வாடகைவீட்டு
கத்தரிக்காய் பொரியலும் பிட்டும்
எமக்கு காலம் தவறி கிடைக்கும்
காலைஉணவு என்பதைவிட
இடையிடையே கிடைக்கும்
சிறந்த உணவு

பிசைய. தெறித்துப்
பறந்து சுவரில் மோதும்
பொரியாத கத்தரிக்காய்
துண்டுகளின் துரோகங்களால்
வென்றுவிடும் தீராதபசி

தட்டிலொட்டிய பொரியல்
எண்ணெய்யை துடைக்கும்
பல அவியாத பிட்டுக்களாய்
புரியாத கற்பித்தல்கள் பல
ஆசிரியர் மனங்களை
அருமையாய் புரிய வைக்கும்

தட்டிலொட்டிய பொரியல்
எண்ணெய்யாய்
இப்போதும் பிசுபிசுக்கும்
பொறியியல் எண்ணங்கள்

அப்படியே அடங்கிப்போன
என் கல்விப் போதைக்கு
காதலையும் கத்திரிக்காயையும்
சொல்லித்தப்பிக்க
எப்போதும் நான் தயாரில்லை

எம்மீதான அடக்குமுறை
எண்ணங்களைத் தவிர...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இராச்சியத்தின் தோற்றம்பற்றிய முன்னைய வரலாற்றுப் பார்வையை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தும் அரிய தமிழ்க்கல்வெட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு

**- பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம்**

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப் பட்டிருக்கும் சூழலில், இலங்கை யின் பல்வேறு பகுதிக ளிலும் அண்மைக் காலத்தில் இடம் பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக் கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதி களில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படை யில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

புகை படர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக் கால வரலாற்றுக்குப் புது வெளிச்ச மூட்டி வருவதில் தொல்லியற் கண்டு பிடிப்புக் களுக்கு முக்கிய இட முண்டு. அக்கண்டு பிடிப்புக்களில் கல்வெட்டுக் கள் நம்பகரமான முக்கிய சான்று களாகப் பார்க்கப்படுகின்றன. அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டா லும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்தி கள் நம்பகரமானவையாகவே பார்க்கப் படுகின்றன. இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். முதலில் இக்கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஜே.எஸ். அருள்ராஜ் என்பவரால், வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அதுபற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது. அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான திரு. பா.கபிலன், திரு.வி. மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் திரு.கிரிதரன் ஆகியோருடன் 30.01.2021 அன்று திருகோணமலை சென்றிருந்தோம். இந்நிலையில் திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜுடன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் திரு. நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன் கடவல பிரதேசசெயலக உத்தியோகத்தர் திரு. நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனிநிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன் கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டட அத்திபாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப் பட்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ளசிறுமலையிலேயேகல்வெட்டும் காணப்படுகின்றது. இம்மலையின் மேற்பகுதியில் திருவாசிபோன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ. இரகுபதி குறிப்பிடுகின்றார். இக்குறியீடுகளுக்கு கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் இரு வரிகளும், ஏனையவற்றில் சில சொற்களும் சமஸ்கிருத கிரந்தத்தில் இருக்கின்றன. கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும் தெளிவற்றும் காணப்படுகின்றன. இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப் படித்தனர். ஆயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப்பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலு அவர்களுக்கும், தமிழக தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபால் அவர்களுக்கும் இக்கல் வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன். அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும்பகுதியை வாசித்து அதன் வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதன் வாசகம் பின்வருமாறு:

1. … க்ஷகே ஸ்ரீவிம்ஜங்கோ ஸநெள ம்ருகே விம்சதி ப.
2. …. …சக்தி ப்ரதிஷ்டாம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ …
3. ஜத்திகள்? ஸ ஜஸ்ரீகுலோஸத்துங்க சோழக் காலிங்கராயநேன்
4. ண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க வி-
5. ஜயவாகு தேவற்கு வீராபிஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-
6. ஜநேமி பூசை காலங்களில் ஆதிக்ஷேத் ரமாய் ஸ்வயம்புவுமாந திருக்கோ-
7. ஜயிலைஸயுடைய நாயநாரை தெண்டன் பண்ணி இன்னாய-
8. நாற்கு சஜக்திஸ ப்ரதிஷ்டை யில்லா மையில் திருக்காமக்கோட்ட நா
9. ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ர திஷ்டை பன்னுவித்து நமக்கு ஜப்
10. ராப்தமாய்ஸ வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்ஜதுஸ நாட்டில் ல-
11. ச்சிகாஜதிஸபுரம் இதுக்குள் நாலூரர் வேச்சர்களுள்ளிட்ட நில
12. மும் …நிதாயாளமு…ட்டும் இதில் மேநோக்கிய
13. மரமும் கீநோக்கிய கிணறும் பேருடரை நீக்கி குடிமக்களுள்பட
14. இந்நாஜச்சியார்க்கு திருப்பள்ளபடிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-
15. க்கும்சாந்த்3ராதித்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோதகம் ப-
16. ண்ணிக் குடுத்தேன் லுள்ளாரழிவு படாமல்
17. … ண் ண . . ட் ட … ப் பெறுக்கிவுண்டார்கள் ஜஆலய்
18. நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்
19. மாக . . டையார் பி… கெங்கைக் கரையிலாயிரங்
20. குரால் பசுவைக் கொன்றாஜர்பாவங் கொண்டார்கள் ஆயிரம் ப்ரா-
21. ஹ்மணரைக் கொன்றார் பாவஜங் கொண்ஸடார்கள் மேலொரு …
22. மாற்றம் விலங்குரைப்பார்.. காலிங்க ராயரின்ஜசொல்படி …
23. த்தியஞ் செய்வார் செய்வித்தார்

கி.பி.13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத்தமிழர்வரலாறுபற்றிஇதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப் போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன. மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும் தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் பொ. இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன். பேராசிரியர் இரகுபதி கல்வெட்டின் சில பாகங்களை வாசித்து அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவ்வப்போது எனக்கு தெரியப்படுத்தியிருந்தார். இந் நிலையில் தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூர் எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர், இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர். இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும், வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டதாக சோழர் காலச் சான்றுகளால் அறிகின்றோம். சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியால் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் நிர்வாக அலகுகளான வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன.

திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன. அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலநறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழரின் ஆட்சி கி. பி.1070 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர;வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப் படுகின்றது. பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும் தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது. கல்வெட்டுப் பொறிக்கப் பட்ட காலத்தில் சோழ நிர்வாகத்திற்கு மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதியாக அல்லது அரச பிரதிநிதியாகக் குலோத்துங்கசோழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது. மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.


பேராசிரியர். சுப்பராயலு இக்கல் வெட்டில் (வரிகள் (3-5) வரும் "ஸ்ரீ குலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம்" என்ற சொற் தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலநறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் / மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார். அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப் பட்டான் என்பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார். இவற்றிலிருந்து இலங்கையை வெற்றி கொண்டு பொலநறுவையில் ஆட்சி புரிந்த கலிங்கமாகன் குலோத்துங்க சோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர;த்தப் பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இக்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழ காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரதிநிதியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. இங்கே கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது. இதனால் குலோத்துங்கசோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபி ஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும். பொலநறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சி யைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந் நிலையில் சோழ, கேரள தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கைமீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215இல் பொலநறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது. இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்களத் தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தபோது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்துவந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துவந்துள்ளன. சில அறிஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர். இந்நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெடுப்புகள் மூலம் கலிங்கநாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப் பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்பு படுத்தி பேராசிரியர் இந்திரபாலா அவர்களால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கட்டுரை மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் "திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து" என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜசோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது. அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும். கோமரன்கடவல சிவன் கோயில் குலோத்துங்கசோழக் காலிங்க ராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்று கல்வெட்டில் வரும் ஆதிச்சேத்திரம் என்ற சொற் தொடரால் தெரிகின்றது. காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பின்னரும் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திற்கும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப் பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்ப வர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும் காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டு ருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்களும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக்காணப்படுகின்றன. முதலில் "ஸ்வயம்புவுமாந திருக்கோ(ணமலை) யுடைய நாயநாரை" என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி "ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை" எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பபராயலு பொருத்தமானதெனக் எடுத்துக்கொண்டுள்ளார். இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்த மாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும். மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை "லச்சிகாமபுரம்" என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார். இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர் புடையது என்பதும் அவரது கருத்தாகும். பேராசிரியர் சுப்பராயலு, கல்வெட்டில் வரும் "மாநாமத்துநடு" என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார். இக்கல்வெட்டில் "பற்று" என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் "பத்து" என அழைக்கப்படுகின்றது. இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்ததாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டைக் படியெ டுக்க வேண்டியிருந்தது. ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்க வேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழியில் கலந்துள்ள உருது மொழிச் சொற்கள்.

| உருதுச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| தபால் | அஞ்சல் |
| தயார் | அணியம் |
| தமாஷ் | வேடிக்கை |
| தரப்பு | பக்கம் |
| தராசு | துலாக்கோல் |
| நபர் | ஆள். ஒற்றையர் |
| பங்களா | வளமனை |
| பதில் | விடை. மாறு |
| பந்தோபஸ்து | காப்புப்படுத்தும் காவல் |
| பயில்வான் | பொருநன். மல்லன் |
| பரவா(இல்லை) | தாழ்வு(இல்லை) |
| பிராது | முறையீடு |
| பீடி | இலைச்சுருட்டு |
| புகார் | முறையீடு. பெருங்கூச்சல் |
| பேட்டி | நேருரை |
| போதை | வெறிமயக்கம் |
| மசோதா | சட்ட முதல் முந்தாவணம் |
| ரகம் | வகை |
| லாடம் | குளம்பணி |
| வசூல் | தொகுத்தல். தண்டல் |
| வாரிசு | மரபுரிமையர் |
| வாபஸ் | திரும்பப் பெறல் |
| மன்னிப்பு | பொறுத்தருள்க |
| மௌசு | கவர்ச்சி |
| மாகாணம் | மாநிலம் |
| செலாவணி | பொருள்மாற்று |
| டக்கர் | குழப்பம் |
| சோக்கு | பகட்டாரம் |
| நாசூக்கு | அழகு. நயத்திறம் |



## மனிதம்

பர.றொபின்சியா, பிரான்ஸ்

பிறப்புக்கும் இறப்புக்கும்
இடைதனில் இங்கே
என்னடா வேலை உடல் உறுப்புக்கு!
மானிடா.....

வாழ்வில் கிடைத்திட்ட
வரம்தான் மனித வாழ்வியல் பிறப்பு.
கொடுத்துண்டு வாழ்வோம்
கோபத்தை தணிப்போம்
கைகோர்த்து கொள்வோம்
காலமெல்லாம் பயணிப்போம்.

நேற்றைய வாழ்வு இன்றில்லை
நாளையும் இங்கு எமக்கில்லை
இடைதனில் ஏனோ இறுமாப்பு
இறைவனின் படைப்பில்
நாங்கள் நடிகர்கள்தானே.

மனமும் எமக்கு குரங்கென்பார்
அறியா மனிதனின் அசட்டைப் பேச்சு.
ஆழ்ந்து நோக்கி பார்த்தேன் - உண்மை
அதுதான் என்று உணர்ந்தேன்.

தேடல் என்பது பெரிதுதான் - மனித
வாழ்வின் புரிதல் அரிதுதான்
கூடி வாழ்தல் நன்றுதான்
மனிதம் குலையா மிருகம் ஒன்றுதான்.
பொழுதுகள் விடியாமலில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொழுதுகள் விடியாமலில்லை

**கவிச்சுடர் ஏ எம் கஸ்புள்ளா**

எங்கேயோ ஒரு பகுதியில் வீசும் பெரும் மழைத்துளிகள் கண்ணா மரங்களின் அசைவுகளோடு சேர்ந்து வந்த பனிக் காற்றின் குளிர்மை மேனியைத் தடவி நடுக்கமுற வைத்தது. அந்தக் கடலோர குடிலில் படுத்துறங்கி வெள்ளாப்புக் கடலில் மீன்பிடிக்கச் செல்ல எழுந்திடுவதற்கான பொழுது பரந்த இருளில் பார்க்க ஒன்றுமே விளங்காமல் ஓட்டை விழுந்த கிடுகுக்குள் சுடரிடும் வான் நிலவும் இன்று எங்கோ ஒளிர்ந்து கொண்டான் போல... கண்களின் வெளிச்சத்தில் விளக்கைத் தேடினேன்.

மண்ணெண்ணை தீர்ந்து போனதால் குடிலுக்குள் இருந்த குப்பி விளக்கும் எரிவதற்கான சூழ்நிலையை இழந்து தவித்தது. போத்தலில் குடிப்பதற்கு வைத்திருந்த நீரில் முகத்தைக் கழுவிட குடிலை விட்டு வெளியே வந்தேன்.

தூரத்தில் யாரோ மின்சூள் (torchlight) அடித்துக் கொண்டு வருவது தெரிந்தது. நானிருக்கும் குடிலை நோக்கித்தான் வருகிறார்போல அவர் பிடித்து வரும் மின்சூள் வெளிச்சம் காட்டித் தந்தது.

பக்கத்தில் வந்தபோதுதான் அடையாளம் வெளங்கிடுச்சி; நம்மட பக்கத்து வீட்டு நஸார், என்ன நஸார் இந்த நேரத்தில் எனக் கேட்டபோது 'இல்ல வீட்டிலே ரொம்பச் சிக்கலா இருக்கு. பிள்ளைகள் எல்லாம் வளர்ந்திட்டாங்க. செலவுகள் அதிகமாச்சி. உனக்குத் தெரியும்தானே வெளிநாட்டில் இருக்கும்போது நல்லா உழைச்சேன். ஒன்றுமே சேமிப்பில் இல்லாததால் இப்போ சோத்துக்கே சிக்கல்படும் நிலை வந்திடும்போல. எனக்கும் இனி வீட்டிலே சும்மா இருக்க முடியல. ஒவ்வொரு நாளைக்கும் பிள்ளைகளின் தேவைகள், படிப்புக்கான செலவுகள் கூடிக்கொண்டே போகுது. அதுதான் உன்னோடு சேர்ந்து கடலுக்குப் போகலாம் எண்டு மனைவியிற்ற மட்டும் சொல்லிவிட்டு வந்துட்டேன்.' தொங்கிய குரலில் அவனது நிலைமைகளைச் சொன்னான்.

இந்த நேரத்தில் அவனைக் கூட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாட்டி நான் மனுசனே இல்ல. காசா கேட்டான் தொழில்தானே என மனசுக்குள் ஓடியது.

'என்ன சின்னவன் யோசிக்கிறா? '

'ஒன்னுமில நஸார் நீ போகப் போக பழகிடுவா. இந்தா சவலைப்பிடி தோணியை மெதுவா தள்ளுவோம். மற்றக் கையால பிடி; சரி; ஏறு போவோம். நான் சவலை எப்படி கடலுக்குள் போடுறேன் பாரு, அதுபோல நீயும் செய்; கடல் உனக்கு புதுசு தானே. நாளை வரும்போது தடித்த சட்டை போட்டுட்டு வா, ஏன்னா குளிர் தாக்காது. கடல் குளிரை நீயும் தாங்கிட மாட்டா. இன்னொரு முக்கியமான விடயம் கொஞ்ச கொஞ்சமா நீ நீச்சல் பழகனும். ஏன்னா கடல்ல எந்த நேரத்திலே என்ன நடக்கும் எண்டு தெரியாது. கடலை இப்ப பாரு அமைதியா, என்ன அழகா இருக்குது. சில நேரங்கள்ல அலைகள் எழும்பி தோணியை கவிழ்த்திடும். அதாலதான் சொல்றன் நீச்சல் கட்டாயம் தேவை. கடல் தொழில் செய்கிறவங்க நீச்சல் தெரிஞ்சிருக்க வேணும்' என்ற சின்னவனின் வார்த்தைகளை உள்வாங்கிய நஸார் 'கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரியிற குப்பி வெளிச்சமும் தோணிகள் தான் என்ன! பாக்கவே அழகாயிருக்கு. வானத்தில தெரியிற நட்சத்திரங்கள் போல கடல்ல பூத்த நட்சத்திரங்கள்தான் இவை'

'ஓமோம்! நீ சொல்றது சரிதான்' என்பதாக தலையசைத்த சின்னவன்.

'நஸார் வலை கொஞ்சம் கீழே பணிஞ்சது போல இருக்கு. மின்சூளை அடிச்சிப் பாரு மீன் ஏதும் பட்டிருச் சான்னு. இடையிடையே நெத்தோலி மீன் பட்டிருக்குபோல. நேரம் கிடக்குத்தானே பொறுத்திருப்போம்.'

'நஸார் நீ வெளிநாட்டில் என்ன வேலை செஞ்ச.'

நான் வாகனஓட்டுநராகத்தான் (Driver) இருந்தன். தொடக்கத்தில அங்கத்தைய மொழிச் சிக்கலால எனக்கும் கொஞ்சம் சிக்கலாக இருந்திச்சு. அவங்க சொல்றது வெளங்கி எடுப்பதற்கு எனக்க நல்லா காலம் எடுத்திச்சி. அங்கத்தயச் சாப்பாடும் அப்பிடித்தான் உப்பு, உறைப்பு கொறைவு. நான் ரொட்டி தான் சாப்பிட்டு வந்தன். பின்னர் பழகிடுச்சி.

வீட்டில் உள்ள பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டுபோறது, கடைகளுக்கு போய்வாறது, குடும்ப உறவுகளைப் போய் சந்திக்கிறது என என்ர வேலை தொடர்ந்திச்சுது. சம்பளம் நேரத்திற்கு தந்திடுவாங்க, பெரிசாக வேலைகள் செய்றதில்ல. இப்பிடித்தான் அங்க வேலைகள் போச்சுது.

'நம்மட நாட்டவங்களக் காணக் கிடைச்சுதா? '

'பயணம் போற வழிகள்ல கடைகள்ல சந்திச்சிருக்கிறன். நீண்ட நேரம் நிண்டு கதைக்கக் கிடையாது. மற்றப்படி நான் வேலை செய்யுற வீட்டுப் பக்கத்தில யாரையும் நம்மூர்க்காரங்களக் காண முடியல.'

'சரி நஸார் மிச்சத்தை நாளைக்கு கதைப்பம். விடிய ஆரம்பிச்சிட்டு வலையை இழுத்து தோணிக்குள் போடு நான் சவல் அடிக்கிறேன். வலை இழுத்தாச்சுதானே தோணியை கடற்கரைக்கு விடுவம்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை தட்டியதும், ஓரளவு மீன் பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

'மீனத் தலை உடையாம கழற்றனும், நான் கழற்றதைப் பார்த்துக்கோ, நெத்தோலிமீனத் தலையில் பிடிச்சித்தான் இழுக்கணும். வால்ல பிடிச்சிழுத்தா மீன் ரெண்டுதுண்டாகிடும். இஞ்சப்பாரு இப்படி மெதுவா கழற்றினாப் போதும் அந்தக் கூடையை அருகில் எடுத்து அதுகுள்ள மீனைப் போடு.'

'நஸார் எல்லாம் கழற்றி முடிஞ்சி தானே கறிக்கு வேறையா ரெண்டு பேருக்கும் எடுங்க. மற்றய மீன்களை வாடியில் கொண்டு கொடுத்து காசி வாங்குவோம்.' சின்னவன் ஒரு மூச்சில் சொல்லி முடித்தான்.

மீனை வாடியில் முதலாளி நிறுத்த போது 30 கிலோ இருந்தது. அதைப் பார்த்த சின்னவன் அல்லாஹ்வைப் புகழ்ந்தான். இருவரும் காசினை வாங்கி விட்டு தத்தமது வீட்டை நோக்கிப் போனார்கள்.

'என்ன இணடைக்கு நேரகாலத்துடன் வாறீங்க.' சின்னவனைப் பார்த்து அவனது மனைவி சுரையா கேட்டாள்...

'இண்டைக்கு நமக்கு கொஞ்ச மீன் பட்டிச்சு. அது மட்டுமல்ல கடலுக்குப் போக புதிய கூட்டாளியும் கிடைச்சிருக்கு.'

'சுரையா நீ எப்போதும் சொல்லுவியே தனியாகப் போக வேணாம். துணைக்கு ஆரையாவது கூட்டிப்போங்க எண்டு. அத அல்லாஹ் நிறைவு செய்திருக்கிறான்.'

சின்னவன் சொல்லி முடிப்பதற்குள் சுரையா 'ரொம்ப மகிழ்ச்சிங்க. இப்போ தாங்க மனசுக்கு நிம்மதியா இருச்சி. யாருங்க அவரு?'

'அது நம்ம நஸார்தான். வெளிநாட்டில் உழைச்ச காசெல்லாம் வீண் செலவுகள் செய்ததாலே இப்போ சிக்கல்படுகிறான். அவனே தன்னாலே வந்து விடயத்தை சொன்னான். மனுசனுக்கு மனுசன் உதவணுமே அதுதானே மனித தர்மம் இல்லையா? இனி நஸாருடனே கடல் தொழிலுக்குப் போவேன். சரி எங்க பிள்ளைகள் ஒருத்தரையும் காணல.'

எல்லாம் வகுப்பு வகுப்பு எண்டு போய்டாங்க.'

'ம்.. சரி..சாப்பிட ஏதும் இருந்தா வை. சாப்பிட்டு கொஞ்சம் தூங்கி எழனும்.

'சரிங்க இந்தா கொண்டு தாரேன்'.

'நல்லதாய் போயிற்று வகுப்பு இல்லாட்டி தூக்கம் கொஞ்சம் சிக்கல்தான்' என்று சொல்லியவாறு சின்னவன் கட்டிலில் மெல்லச் சாய்ந்தான்.

கணவனைப் பார்த்த சுரையா வெயிலிலும் மழையிலும் குளிரிலும் கிடந்து இந்த மீனைப் பிடிக்கிறதுக்கு மனுசன் என்ன பாடு படுகிறார் இவர் மட்டுமா? இவரோடு சேந்து எத்தனை பேர்கள் கடல் தொழில் செய்றாங்க அதுவுமில்லாமல் கடும் காற்று, கடல் கொந்தளிப்பு, கடும் புயல் காற்று வந்தா தொழில் அடிபட்டு விடும். அதுவரைக்கும் கடலை நம்பி வாழ்ந்த சனத்திற்கு பணச்சிக்கல் வந்து மனச்சிக்லை ஏற்படுத்திச் செல்லும். வருடத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதடவையோ ரெண்டுதடவையோ அனர்த்தம் வரும்போதெல்லாம் எங்கட வயிற்றைக் காயத்தான் போடணும்.

அவளுக்குள் உதிர்ந்த இந்த வார்த்தைகளில் உண்மை நூறு வீதம் ஒட்டியிருந்தது.

தன் கணவன் சின்னவன் கொண்டு வந்த மீனை சமைத்து அதோடு சேர்த்துக் கீரை ஏதாவது சுண்டிச் சாப்பிட்டால் நல்லா இருக்கும் என்று நினைத்தவள் வேலியில் படர்ந்த பாலைக் கீரையைக் கண்டு அதை பறித்து கொண்டாள். மனம் நெனச்சது போல கீரை கிடைத்ததால் சுரையாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான்.

பகல்சாப்பாட்டு வேலையை செய்யத் தொடங்கினாள். கணவன் சின்னவனைக் கொஞ்சம் கவனித்ததால் பீங்கான் மற்றும் சில சட்டிகளும் கழுவாமல் மிகுதியாகக் கிடந்தன. அந்த வேலைகளை முதலில் முடித்தாள்.

மேலதிக வகுப்புக்குப்போன பிள்ளைகளும் பசியுடன் வருவார்கள். சீக்கிரமா சமைக்கணும் என்ற எண்ண உணர்வுகளுடன் அவளுடைய வேலைகள் விரைவாகின.

நேரம் என்னாச்சோ தெரியல இந்தக் கைத்தொலைபேசி வந்த பின்னால் வானொலி கேட்கிறதும் நின்று போச்சி. அதிலேதான் பாட்டுப் போட்டாலும் செய்திசொன்னாலும்அடிக்கடி நேரத்தைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். கைத்தொலைபேசிய கண்டுபிடிச்சவன் பணக்காரனாகிட்டான். அதைக் கையில கொண்டு திரிபவன் பிச்சை எடுக்கும் நிலைக்கு மாறிவிட்டான். இத எப்போதான் மனிதர்கள் உணர்வார்களோ? அவள் உள்ளத்தில் தெளிவாகச் எண்ண ஓட்டங்களாக ஓடின.

நேரங்கள் விரைந்தோட சின்னவனை எழுப்பிச் சாப்பாடு பரிமாறினாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த சின்னவனுக்கு ஏதோ அறிவித்து வரும் சத்தம் கேட்டது. இவன் இருக்கும் வீதிக்கு வந்ததும் அந்தச் சத்தம் தெளிவாக...

'இன்று கடும் காற்றுடன் மழை பெய்யும் அதனால் கடல்மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம்" இது காலநிலை அறிவுப்புக்கிணங்க காவல்துறை விடுக்கும் செய்தி.

இந்த அறிவிப்பைக் கேட்ட சின்னவன் நஸாருக்கு விடயத்தைச் சொல்லணும் செல்லாமல் இருந்தால் என்னைத்தேடி கடற்கரைக்குப் போயிடுவான் என்ற எண்ணத்தோடு அவனது வீட்டை அடைந்தான்.

'ஒரு நாள்தான் கூட்டிப் போனேன் மறுநாள் கூட்டிப் போக முடியாமல் போச்சே' என்று நஸாரிடம் சொல்ல.

'அது பரவாயில்லை. போனால் நம்மட உயிருக்குத்தான் சேதம்' என்று நஸார் தனது கருத்தையும் சொன்னான்.

'சரி நஸார் இன்ஸா அல்லாஹ் நாளை கடலில் சந்திப்போம். நான் போயி வாறன்'

அங்கிருந்து சின்னவன் கிளம்பினான்.

கடற்றொழில் வாழ்க்கை இப்படித்தான் கடல் சூழ்நிலைகள் சரியாக இருந்தால்தான் வாழ்வை ஓட்டலாம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அன்றைய இரவின் தூக்கத்தில் சின்னவனின் வாய் முணுமுணுத்தலுடன் இரவுப்பொழுது கழிந்தது.

பனி சூழ்ந்த மேகங்கள், பறக்க மறுக்கும் பறவைகள், கதவுகள் இன்னும் திறக்கப் படாமல் உள்ள வீடுகள் என எல்லாமே அதிகாலைப் பனியின் கட்டுப் பாட்டுக்குள் இருந்ததை கண்ணுற்றவாறு நஸார் சின்னவனை நாடி வந்தான். தூண்டலில் எவ்வாறு மீன் பிடிப்பது பற்றியும் அறிந்து கொள்வதாக அவர;களின் இன்றைய கடல் பயணம் அமைந்திருந்தது.

இஞ்சப்பாரு; நஸார் தூண்டலில் இரையைக் கொழுவி கடல்ல வீசி விடோணும். இரையைக் கோதுமை மாவோட ஊரியிடசதை, இறாலயும் பயன்படுத்தலாம். மீன் பிடிபட்டிருச்சா என்றத தூண்டல் கயிறு இழுபடுறது காட்டித்தரும். இப்படித்தான் தூண்டல்ல மீன்பிடிக்கிற. ஆனா ஆழ்கடல்ல தூண்டல ஓடவிட்டு மீன்பிடிப்பாங்க. அதுக்கு இரை. இறப்பர் அமைப்பில இருக்கும். இது ஆழ்கடல்ல மீன் பிடிக்க பின்பற்றும் வழிமுற.'

'அப்படியும் இருக்கா?' என்றநஸார் கேள்வியோட சின்னவன் சொல்லும் விடயங்களை அவதானித்துக் கொண்டான்.

தோணி கரைக்குத் தட்டும் போது சின்னவனிடம் 'நான் முன்னர் வேலை செய்த இடத்திலிருந்து முதலாளி அழைப்பு எடுத்தார். எனக்கு நுழைவுச்சான்று (Visa) அனுப்புவதாகச்சொன்னார்., அப்படி வந்தா. நான் போயிடுவேன்' என நஸார் சொல்ல

ஓ நல்லதுதனே. இந்தத் தொழிலை நீ பாத்தாதானே! எவ்வளவு சிக்கல் எண்டு. கட்டாயம் போ' என்று சின்னவனும் பதிலளித்தான்.

சொன்னது போல நஸார் வெளிநாடு பறந்தான்.

சின்னவன் அன்று காலை தோணியை தள்ளிக் கொண்டிருந்தான். தன் மனைவி சுறையா வேகமாக நடந்து வருவதைக் கண்டான். இந்தாங்க உங்க கூட்டாளி அழைப்பு எடுத்திருக்கிறார். கதைங்க...

வணக்கம் நான் சின்னவன்.'

'நான்தான் நஸார்! '

எப்படி சுகமா? தொழில்பாடுகள் என்ன மாதிரி. நான் உங்களுக்கு நுழைவுச்சான்று அனுப்புறேன். கடவுச்சீட்டு (Passport) பிரதியொண்டு அனுப்பி வையுங்க சின்னவன். நீங்க அனுப்பின புறவு நான் திரும்பியும் அழைப்பு எடுப்பன். இப்போதைக்கு இவ்வளவுதான் நேரம் கிடைத்தால் இடையில அழைப்பு எடுக்கிறன்.' அழைப்புத் துண்டிக்கப்பட்டது

நஸாருடன் பேசி முடித்த மகிழ்ச்சியில் சின்னவனுக்கு வாயிலிருந்து கதை வராமல் கண்களில்மெதுவாக சுரந்த நீருடன் சுறையாவின் கைகளைப் பிடித்த வாறு பழகிய நட்புக்காக என்னையும் வெளிநாட்டுக்கு எடுக்க இருக்கின்ற தகவலை மனைவியுடன் சொல்ல...

அவள் 'அல்லாஹ்விடம் இருகைகள் ஏந்தி' புகழ்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றிடம்

சத்தியப்பிரபா
கடற்கரைச்சேனை

நீண்ட நெடிய
நாட்களின் பின்
ஒரு திருவிழா நாளில்
ஊருக்குப் போய் இருந்தேன்
அத்தனை பெரிய
இரக்கமற்ற அற்ற இடைவெளியை
காலம் நம் இருவருக்கும் இடையே
நிரப்பி இருந்தது

ஓர் இறகைப்போல்
இலகுவில்
உதிர்த்துவிட முடிவதில்லை
சில நினைவுகளை
அது வாழை மடலில் ஆழப்புதைந்த
மரங்கொத்தியின் அலகுபோல்
மெல்ல மெல்ல உயிர் குடிக்கும்.

காற்றைக் கண்டதும்
பிடி தளரும் பழுத்த இலைபோல்
உனைப்பார்த்ததும்
கனத்த நினைவுத் துண்டொன்று
கண்கனில் மிதக்கின்றது

காதலின் உளிக்கு இரண்டு பக்கங்கள்
முதல்ப் பக்கம்
செதுக்கிச் செதுக்கி மெருகேற்றும்
மறு பக்கம்
சிதைத்துச் சிதைத்து உருக்குலைக்கும்
இரண்டாம் பக்கத்தில் நாமிருவரும்.

மாலைநேர நிழல் விலகுவதுபோல்
நீண்டு பிரிந்து இருள் சூழ்ந்து
கொண்ட
நினைவுகளை பெண் போராளியின்
இரகசியம்போல் பத்திரப்படுத்தி
இருக்கிறேன்

குழந்தைகளைப்போல்
திருவிழாக்களில்
தொலைவதற்கென்றே
பிறக்கின்றன சில
காதல்கள்.
சில காதல்கள்
ஏழையின் உண்டியல் போல்
நிரம்பாமலே உடைந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உருவத்திலல்ல உள்ளத்திலே...

## செம்மாதுளன்

அந்த மாமரத்தைத் தழுவி படர்ந்தபடி இருந்தது ஒரு மல்லிகைக் கொடி.

வெள்ளி பூத்தது போல பல பூக்கள் கொத்துக் கொத்தாய் அதன் கொடிகளில் மலர்ந்து மணம்வீசிக் கொண்டிருந்தன.

தனது பூக்களின் வாசனையால் அந்த வட்டாரத்தையே கொள்ளையிட்டுக் கொண்டிருந்த மல்லிகைக்கு தலைகால் புரியாத அகந்தை தலைக்கேற, தனக்குப் படருவதற்கு இடந்தந்த மரமென்றுகூட எண்ணிப்பாராது அகந்தையுடன் அந்த மாமரத்தைப் பார்த்து 'ஏய் மாமரமே புள்ளிப் புள்ளியாய் பூத்திருக்கும் உனது பூக்களும் ஒரு பூக்களா? எனது பூக்களைப் பார்த்தாயா.... எத்தனை அழகு...எத்தனை நறுமணம். இந்த வட்டாரமே எனது பூக்களின் வாசனையில் மயங்கிக் கிடக்குது. நீயும் உனது புள்ளிப் பூக்களும்.' எனச் சொல்லியபடி ஓர் ஏழனச் சிரிப்புச் சிரித்தது.

மல்லிகைக் கொடியின் மமதை வார்த்தைகளால் மனம் புண்பட்ட மாமரம் தன்னடக்கத்துடன் அமைதி காத்தது.

கால நகர்ச்சியில் புள்ளிப் புள்ளிப் பூக்கள் பல சிறு சிறு பிஞ்சுகளாய், காயாகி, முற்றிக் கனிகளாக தொங்கிக் காட்சியளித்தன.

கனிந்து தொங்கும் பழங்களை உண்ண அணில்களும், கிளிகளும், காகங்களுமென பல பறவைகளும் மாமரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து மாங்கனிகளை மனம் மகிழ உண்டு மகிழ்ந்து ஒலியெழுப்பி கலகலப்பூட்டிக்கொண்டிருந்தன.

இதையெல்லாம் பார்த்தும் கேட்டும் ஆனந்தப் பரவசமெய்திய மாமரம்,

'அன்பான மல்லிகைக் கொடியாரே புள்ளிப் புள்ளியாகப் பூத்திருந்த எனது பூக்களைப் பற்றிய உமது தாழ்மையான கருத்தை இப்பொழுது சொல்லும்.' என மல்லிகைக் கொடியைப் பார்த்து மெல்லச் சிரித்தபடி கேட்டது.

மல்லிகைக் கொடிக்கு பதில் ஏதும் சொல்லத் தோன்றாத நிலையில் அமைதியாக நிலத்தை நோக்க, ' உருவத்திலல்ல உள்ளத்திலேயே சிறப்பு' என மல்லிகையைப் பார்த்து நிலம் சொல்லி நகைத்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அறிவோம்

## தமிழ்ப்பித்தன்

மேற்படி தலைப்பில் "நம்மட முற்றம்" திங்கள் (மாதம்) இதழில் இல்லம்:1 முற்றம்:1 இல் கிழமைகளில் பிறமொழிச் சொற்களான புதன், சனி ஆகியவற்றுக்குரிய தமிழ்ச் சொற்களையும் பன்னிரண்டு மாதங்களுக்குரிய தமிழ்ச் சொற்களையும் 'அ' வில் தொடங்கும் 31 பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களையும் தந்திருந்தேன்.

முற்றம்:02 இல் 'ஆ'வில் தொடங்கும் 28 பிறமொழிச் சொற்களுக்கும் 'இ' இல் தொடங்கும் 28 சொற்களுக்கும் தமிழ்ச் சொற்கள் தரப்பட்டன. பின்னர் வெளிவந்த முற்றத்தில் தமிழ் அறிவோம் தொடர் இடம்பெறவில்லை. கடினமான இப்பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டாலும் எழுத இயலாமற் போயிற்று.

நம்மட முற்றம் முதன்மை ஆசிரியரின் தொடர் வேண்டுகையின் காரணியமாக இவ்விதழில் தமிழ் அறிவோம் பகுதி-3 மீண்டும் தொடர்கின்றது.

ஏலவே வெளிவந்த அ. ஆ. இ ஆகிய எழுத்துக்களில் தொடங்கும் பிறமொழிச் சொற்களுக்குக் கூடுதலாக இற்றைவரை தொகுக்கப்பட்ட சொற்களில் 'அ'வில் தொடங்கும் பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் இவ்விதழில் தொடர்கின்றன.

| பிறமொழிச் சொல் | - தமிழ்ச் சொல் |
|---|---|
| அக்கப்போர் | - வம்புப்பேச்சு |
| அக்கம் | - கண். கயிறு. பாம்பு. பொன் |
| அக்கர(ரா)காரம் | - மருந்துப்பூண்டு. மருந்துவேர் |
| அக்கரம் | - எழுத்து. மாமரம் |
| அக்கரன் | - அழிவில்லாதவன். கடவுள் |
| அக்கரைச்சீமை | - கடல்கடந்தநாடு |
| அக்கி | - கண். தீ. தேர். வெம்பு |
| அக்கிரகண்ணியன் | - அவையில் முதல் வனாக மதிக்கப்படுபவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அக்கிரகாரம் | - பார்ப்பனச்சேரி. பார்ப்பூர் |
| அக்கிரசம்பாவனை | - முதல்வரவேற்பு |
| அக்கிரம் | - உச்சி. தொடக்கம். நுனி. முதன்மை. |
| அக்கிரமம் | - ஒழுங்கின்மை. கொடுமை. நலனின்மை. முறையின்மை. வரம்புமீறிய செய்கை |
| அக்கிராசனம் | - அவைத்தலைமை |
| அக்கினிக்குண்டம் | - அழற்குடம். தீக்குடம் |
| அக்கினிக்குழம்பு | - எரிமலைக்குழம்பு |
| அக்கினித்திராவகம் | - எரிநீர். தீயெரிநீர். வெடியம் |
| அக்கினிநட்சத்திரம் | - நளிஉடு (கார்த்திகை உடு). அனல்உடு |
| அக்கினிப்பிரவேசம் | - உடன்கட்டையேறுதல். தீப்பாய்தல். தீப்புகல் |
| அக்கினிதிசை | - தென்கிழக்கு |
| அக்கினிவிசம் | - பொன்(தங்கம்) |
| அகங்காரம் | - இறுமாப்பு. 'நான்' எனும் செருக்கு |
| அகடவிகடம் | - இரண்டகம். குறும்புப் பேச்சு. பகடி |
| அகதகாரன் | - மருத்துவன் |
| அகதி | - ஏதிலி. போக்கற்றவர். வழியிலி. வறியவர் |
| அக்குரோணி | - பெரும்படையின் ஒரு கூறு. 21870 தேரும் 21870 யானையும் 65610 குதிரையும் 109350 காலாளும் கொண்ட படைத்தொகுப்பு. |

## நிலவின் ஒளியில்

சாணம்தெளித்துக்
கோலம்.
வாசலில் கொட்டிய
பவள மல்லி மலர்கள்
எங்கோ கூவும் குயில்.
கொல்லையில்
வம்பளக்கும்
மாமரத்துப்பறவைகள்
வீட்டில் ஊறிய
பழஞ்சோறு
நார்த்த ங்காய் ஊறுகாயுடன்
பசியாறிய காலங்கள்
தண்ணீர் இறைக்கப்படும்
கிணறுகள்
ஆத்தா கொடுத்த
குவளைத்தேனீர்
சாளரத்தோரம் படித்த
பொன்னியின் செல்வன்
இப்படியாய்
திரும்பி வாரா
சென்ற காலங்கள்....

தென்றல் கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாகர்களும், நயினார்தீவும், வருங்காலமும்.

**மாணிக்கவாசகர் வைத்தியலிங்கம்**

நாகர்களின் முக்கிய வழிபாடாகக் காணப்பட்டது நாகவழிபாடு. ஈழத்தமிழர்களிடையேயும், தமிழகத் தமிழர்களிடையேயும், ஆதியிலிருந்தே நாகவழி பாடு காணப்பட்டதென்பதற்கு அதன் எச்சங்களாகக் காணப்படும் வழிபாட்டு முறைகளும், ஊர்ப்பெயர்களும் சான்றாகக் காணப்படுகின்றன.

நாகர்கோயில் நாகதேவன்துறை, நாக தீவு போன்ற பெயர்களும், இன்றும் மக்களால் பின்பற்றப்பட்டுவரும் நாகவழிபாட்டுமுறையும், இக்கூற்றை உறுதி செய்கின்றது.

ஆரியர் வருகை காரணமாக முதன்மை வழிபாடாகக் காணப்பட்ட நாகவழிபாடு அருகியே பின்பற்றப்பட்டது. ஆதியிலே காணப்பட்ட நாகவழிபாட்டுத் தலங்கள் யாவும், நாகதம்பிரான் கோயில், நாகம்மாள் கோயில் என உருமாற்றம் பெற்றன.

ஈழத்தில் நாகர்களின் முக்கிய பிரதேசமாக நயினாதீவு காணப்பட்டுள்ளது. ஆதியில் நாகர்களின் முக்கிய வழிபாட்டுத்தலமாகக் காணப்பட்டுப் பின்னர், நாகபூசணி அம்மன் திருக்கோயிலாக மாற்றம் பெற்ற தலமே, நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். இக்கோவிலின் கருவறையிலுள்ள சீறும் ஐந்தலை நாகச் சிலை, பல்லாயிரமாண்டுகள் பழமையானதென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஈழத்திலே காணப்படும் பெரும்பாலான கோயில்கள். ஐதீகம் மற்றும் புராணக் கதைகளோடு மட்டும் தொடர்பு கொண்டவையாகக் காணப்படும்போது, நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், பல்வேறு தொடர்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. வரலாற்றுக் குறிப்புகள், சாசன ஆதாரங்கள், தமிழ் இலக்கியத் தொடர்புகள், கர்ண பரம்பரைக் கதைகள், புராண வரலாறுகள் எனப் பல்வேறுபட்ட தொடர்புகளையுடையதாக விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பெற்றது இவ்வாலயம். இவ்வாலயம் அமைந்துள்ள தீவும் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டு, பல்வேறு வகையில் ஆலயத்தோடும் தொடர்பு கொண்டுள்ளது.

சரியான வரலாறுகள் காணப்படாத விடத்து இலக்கியங்களே வரலாறாகவும் கருதப்படுவதுண்டு. ஈழத் தமிழர்களின் தொன்மையும் வரலாறும் இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றது.

இந்திரன் தனது சாபம் நீங்கி அம்மனுக்கு ஆரம்பத்தில் சிறிய ஆலயம் கட்டினான் என்றும், ஆதியில் அன்னைக்கு நாகம் அயலிலுள்ள புளியந்தீவில் இருக்கும் நாகதம்பிரானிடம் பூப்பறித்து கடல்வழியாக வரும் வேளையில் கருடன் இடைமறித்து நாகத்தை கொல்ல எத்தனிக்கும் பொழுது அவ்வழியே வந்த வணிகரான மாநாய்க்கன் பிணை தீர்த்து நாகத்தை வழிபடச்செய்தான் என்றும்,

மகாபாரதத்தில் அர்சுனன் நாகங்களைக் கொன்ற பாவங்கள் தீர நாகதீவு (நயினாதீவு) வந்து நாககன்னியை மணந்து பப்பரவன் என்ற மகனைப் பெற்றதும் அந்த மகனின் பெயரிலே இன்றும் அம்பாளின் ஆலயத்திடலுக்கு பப்பரவன் திடல் என்றும் அழைப்பர்.

மணிமேகலையில் நாக இளவரசியான பீலிவளை மீது கிள்ளி என்னும் சோழ வேந்தன் காதலுற்று அவளைப் பிரிந்து வருடந்தோறும் நடத்தும் இந்திர விழாவையும் நடத்த மறந்தான்

என்றும் இவர்களின் குழந்தையே தொண்டமான்இளந்திரையன் என்றும்

இவனின் சந்ததியினரே பிற்காலத்தில் தொண்டைமான் சந்ததியினரும் தொண்டை மண்டலத்தேசத்தவரும். ஆவர்

எனவே நயினாதீவானது பல கர்ண பரம்பரைக் கதைகளோடும் பல புராண இதிகாசங்களோடும் பின்னிப் பிணைந்திருப்பதை அதன் எச்சங்களில் இருந்து அறியமுடிகிறது.

இக்கோவில் பதினெட்டு மகா சக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும் தந்திர சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது. ஒரு சிலர் உண்மையான சக்தி பீடக் கோவில் போர்ச்சுக்கீசியப் படையெடுப்பில் இடிக்கப்பட்டு விட்டதால் இந்தக் கோவிலின் அம்மன் சன்னதியே சக்தி பீடமாக வணங்கப் படுகிறது என்றும் கூறுகிறார்கள்


மகாவம்சம் என்னும் நூலில் நயினாதீவு பற்றிய பல குறிப்புகள் உள்ளன. புத்தர் வாழ்ந்த காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்த இரண்டு நாக அரசர்களுக்கிடையில் ஒரு மணியாசனத்தின் உரிமை தொடர்பாக ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைப்பதற்காக அவர் நாகதீபத்துக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இதே பிணக்கு/யுத்தம் 'மணிபல்லவத்தில்' இடம்பெற்றது என்று 'மணிமேகலை'க் காப்பியம் கூறுகின்றது.

புத்தர் வந்ததும் சமாதனம் ஆனதும் பழைய வர லாறு .

இந்த தீவுக்கு நாகதீவு அல்லது நாகத்தீவு, நயினார்தீவு, நாகநயினார்தீவு, மணிநாகதீவு, மணிபல்லவத் தீவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணித்தீவு, பிராமணத்தீவு, ஹார்லெம் (Haorlem), சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன

ஒல்லாந்தர் ஆண்டபொழுது ஹார் லோம் என்றே ஆசையாகக் கூறுவர்.

நாகதீவு எனும் பெயர் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் குறிப்பதாக வழங்கப்பட்டதற்கு அசைக்க முடியாத சான்றாக வசப அரசனின் காலத்தில் (கி.பி.66-111) பொறிக்கப்பட்ட வல்லிபுரக் கோயிற் பொற்சாசனம் விளங்கு கின்றது.

ஆகவே, 'நாகதீப' அல்லது 'நாகதீபம்' என்ற பெயரால் நயினாதீவை அழைக்கும் வழக்கம் மிகச் சமீப காலத்தில் - இங்குள்ள புத்தர் கோவில் அமைக்கப்பட்ட 1940 களின் முற்பகுதியில் - தோன்றியது என்பதே சரியாக அமையும். என நம்புங்கள்.

மணிபல்லவம்' என்ற பெயரும் 'நாகதீபம்' என்ற பெயரைப் போன்று முழு யாழ்ப்பாணக் குடாநாட்டையுமே குறிப்பதாக வழங்கப்பட்டது என்பது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் சி. இராசநாயகம் ஆகிய அறிஞர் பெருமக்களது கருத்தாகும்.

ஸ்ரீ ழிற்பி பீரிஸ், பரணவிதான போன்ற சிங்கள தொல்பொருளியல் அறிஞர்களும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர்.

இச்சிறுதீவின் தற்காலப் பெயரான 'நயினாதீவு' என்ற பெயர் இத்தீவுக்கு இடப்பட்ட காரணம் இங்கு நயினார் பட்டர் என்ற பிராமணர் குடியேறியதே என்று சிலர் கூறுவது பொருத்தமற்ற கூற்று என்பதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தெளிவாக கூறியிருக்கிறார்.

முதலியார் திரு.செ.இராசநாயகம், தமது "யாழ்ப்பாணச் சரித்திரம்" (1933) என்னும் நூலில் இதனை அறுதியிட்டுபின்வருமாறு கூறியுள்ளார்.

விசயனின் வருகைக்கு முந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடும் அயலிலுள்ள திவுகளும், திருமலை, வன்னி, மன்னார், மற்றும் கிழக்கு மேற்குக் கரையோரப் பட்டினங்களும் நாகர்களது குடியிருப்புக்களாக இருந்தன. யாழ்ப்பாணக் குடாநாடும் அயல் தீவுகளும் "நாகதீபம்" என்ற பெயருக் கேற்றவாறு, கதிரமலையில் தனது தலைநகரைக் கொண்ட, ஒரு நாகர் அரசின் கீழ் இருந்தன.

"இத்தீவுகளிலும், இலங்கையின் மேற் பாகத்திலும், சரித்திர காலத்துக்கு முந்தியே நாகர் எனும் ஒரு சாதியார் குடியேறி யிருந்தனர். இத்தீவுகளுக்கு இப்போது கந்தரோடை என்று அழைக்கப்படும் கதிரமலையே இராசதானியாகவிருந்தது."

நயினார்தீவும், ஏனைய யாழ்ப்பாணத் தீவுகளையும் யாழ் குடாநாட்டையும் போன்று, சரித்திர காலத்துக்கு முன்னர் - அதாவது விசயன் வரவுக்கு முன்னர் - நாகர்களது ஒரு குடியிருப்பாக இருந்தது நயினார்திவு, நாகதிவு, நாகதிவயின, நாகநயினார்திவு, ஆகிய நயினாதீவுக்கு வழங்கப்பட்ட தொன்மைவாய்ந்த பெயர்களும் இவ்வுண்மையை மேலும் உறுதிசெய்கின்றன.

1619 இல் யாழ்ப்பாணத் தமிழரசு போர்த்துக்கீசரிடம் வீழ்ந்தது. "கி.பி. 1620 இல் தொடங்கிய போர்த்துக்கீச தனியரசாட்சியில், முதற் தேசாதிபதியான பிலிப் தே ஒலிவேறா நல்லூரை வதிவிடமாக்கியவுடன் முன்கூறியபடி நல்லூர்க் கந்தசாமி கோயிலை இடித்து, அக்கோயிற் கற்களைக் கொண்டு கோட்டையும் வீடுகளும் கட்டினான்.

யாழ்ப்பாணத்தில் இருந்த சைவ, வைணவ ஆலயங்கள் எல்லாவற்றையும் தரைமட்டமாக இடிப்பித்தான். இதை யறிந்த கோவிலதிகாரிகளும், அர்ச்சகர் களும் தத்தம் கோவில் விக்கிரகங்களைக் கிணறுகளிலும், குளங்களிலும் போட்டு மறைத்தார்கள். யாழ்ப்பாணத்திலன்றித் தமக்கெட்டிய மற்றும் பிற இடங்களில் எல்லாம் உள்ள புத்த, சைவ ஆலயங்கள் எல்லாவற்றையும் பறங்கிகள் இடித்து நாசமாக்கிவிட்டனர்," என்பது முதலியார் செ.இராசநாயகம் அவர்களது கூற்று.

1939 இல், நயினாதீவில் சிங்கள புத்த பிக்கு ஒருவர் வந்து, தெருவெங்கும் சுற்றித் திரிந்தார். மர நிழலில் படுத்து உறங்குவார். 'ஒரு நாளுக்கு ஒரு வீட்டில்' என்று முறை வைத்துப் போய் உணவு பெற்று உண்பார். சில ஆண்டுகள் செல்ல, நயினை திரு.இளையவர் கந்தர் என்பவர் திரு.நல்லதம்பி என்பவருக்கு ஈடுவைத்து நீண்டகாலமாக மீட்காமல் விட்டிருந்த சிறு துண்டுக்காணி ஒன்றை நல்ல விலை தந்து தான் வாங்கிக்கொள்வதாக காணி உரிமையாளரிடம் (திரு.இளையவர் கந்தர்) ஒரு ரூபாவை முற்பணமாகக் கொடுத்துவிட்டு திடீரென்று ஒருநாள் அந்த பிக்கு வெளியூர் புறப்பட்டுப் போனார். சில நாட்களில் அவர் திரும்பிவந்து, கணிசமான விலைக்கு அக்காணித் துண்டை வாங்கி, சில வருடங்களில் புத்த தாதுகோபம் ஒன்றை 1944 இல் நயினாதீவில் அமைத்தார். சிங்கள யாத்திரீகர் வருகை இந்தக் காலகட்டத்திலேயே முதன்முதலாக நயினாதீவில் இடம்பெற ஆரம்பித்தது. இதற்கு முன்னர் நயினாதீவில் தமிழ்ப் புத்தர் கோவில் ஒன்று இருந்திருக்கலாம். அல்லாமலும் இருக்கலாம். நயினாதீவு அல்ல - யாழ்ப்பாணக் குடாநாடுதான் 'மணிபல்லவம்' எனவும் 'நாகதீபம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் அழைக்கப்பட்டது என்பது நிறுவப்பட்டுள்ள நிலையில், இதனை எவரும் திட்டவட்டமாகக் கூறுவதற்கு முடியாது. ஆனால், இங்கே சிங்களவர்களது புத்த விகாரை இருந்ததற்கான எவ்வித ஆதாரமும் இல்லை.

கிறீஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கி, கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை பௌத்தம் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் தழைத்திருந்த காலத்து, நாகதீபத்தில் - அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டில் - வாழ்ந்த தமிழ் நாகர்களும் அவர் பின்னோரும் பௌத்தர்களாக மதம் மாறி வாழ்ந்த காலத்தில், நயினாதீவிலும் பௌத்தமதம் காலூன்றி இருந்திருக்கலாம். மாமன்னர் முதலாம் இராஜஇராஜ சோழ தேவரும், அவரது புதல்வர் முதலாம் இராசேந்திர சோழ தேவரும் தமது நண்பரான சிறீவிசயத்து அரசரின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க நாகபட்டினத்தில் கி.பி. பத்தாம் நூற்றாண்டில்கூட மாபெரும் புத்தர் கோவில் ஒன்றை அமைத்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. சில நூற்றாண்டுக்கு முன்னர் பெருமளவுக்கு பௌத்தராக வாழ்ந்தோரின் சந்ததியாரே இன்றுள்ள தமிழர்கள் ஆவர்.

ஆகவே, 1939 இல் நயினாதீவுக்கு வந்த புத்தபிக்குவால் 1944 அளவில் இங்கு ஒரு புத்த விகாரமும் தாதுகோபமும் அமைக்கப்பட்டதற்கு முன்பு, நயினாதீவில் புத்தர்கோவில் ஏதாவது எக்காலத்திலாவது இருந்திருக்குமாயின் பௌத்தர்களாயிருந்த நயினையில் வாழ்ந்த தமிழ் நாகர்கள் சைவர்களாக மதமாற்றம் பெற்றமையாலும், அதன் பின் பௌத்தர்கள் யாரும் இங்கு குடியேறாமையாலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்த அக்கோவிலும், நயினார் (அல்லது நாகம்மாள்) கோவிலைப் போன்று கி.பி.1620 அளவில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது என்று கருத இடமுண்டு. அப்படியான புத்தர்கோவில் இங்கே இருந்திருக்குமாயின், அந்தத் தமிழ்ப் பௌத்தர் கோவில் நயினாதீவில் எந்த இடத்தில் அமைந்திருந்தது என்பது இதுவரை ஆதாரபூர்வமாக கூறுவார் இதுவரை இல்லை

வட இலங்கையில் வாழ்ந்த நாகர்கள் முதலில் நாகவழிபாட்டுடன் சங்கமித்த பௌத்தத்தை ஏற்றுக்கொண்டு பௌத்தர்கள் ஆகினர். பின், கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் சைவம் தழைக்க அவர்களும் சைவசமயத்தைச் சார்ந்தனர்.

இக்காலத்தில் (கி.பி. 1620 – 1624 அளவில்) நயினாதீவுக் கோவில் அழிக்கப்பட்டது. நயினாதீவில் இருந்த கோவில் அழிக்கப்பட்ட பின்பு, போர்த்துக்கீசரும், அவர்களின் பின்வந்த டச்சுக்காரரும் அதனை மீள நிறுவுவதற்கு அனுமதிக்கவில்லை. இருப்பினும் டச்சுக்கார ஆட்சியின் இறுதிக்காலத்தே (கி.பி.1788 அளவில்) கோவில் இருந்த இடத்தில் சிறிய அளவில் வழிபாடு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

இலங்கையை இராவணன் ஆண்டானென வரலாற்று நூல்கள் கூறும், விரசிவசு என்பவனுக்கும், கேகசி என்பவளுக்கும் புத்திரனாகப் பிறந்த இராவணன் இலங்கையை அரசாண்ட மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை என்ற பெயர் புராதனமான தென்பதற் கையமில்லை. அப்பெயராற் குறிக்கப்படும் இலங்கை தற்போதைய இலங்கைதான் என்பதற்காய காரணங் களையும், வரலாற்றுச் சான்றுகளையும் ஆராய்ந்தால் சீதா பிராட்டியாரின் பெயருடன் இணைப்புடைய தாக சீத்தலவா (சீதைவெளி) சீதால (சீதையருவி) என்ற பெயர்கள் தற்போதும் காணப் படுகின்றன.

கி.பி.2ஆம் நூற்றாண்டில் 1ஆம் கயபாகு வேந்தன் இலங்கையை ஆண்டான். அவன் 'கடல் சூழிலங்கை கயபாகு வேந்தன்' எனச்சிலப்பதிகாரத்தில் அழைக்கப்படுகிறான். ஆகவே, கி.பி.2ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இலங்கை யென்ற பெயரிலேயே இத்தீவு இருந்ததென்பதே உண்மை 'யாழ்ப்பாணம் ஒரு பாணனுக்குப் பரிசிலாக வழங்கப்பட்ட ஒரு மணற்றிடர்' ஆகும் '

அவர் பரிசிலாகப் பெற்றவிடம் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமல்ல. தற்போதைய யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் கரையூர், பாசையூர், பறங்கித் தெரு, பண்ணை முதலிய கடற்கரைப்பிரதே சங்களே என ஒரு சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் வடபகுதியை முற் காலத்திலேயிருந்து நாகவரசர்கள் ஆண் டார்களெனவும், கந்தரோடை பல நாகவரசர்களது இராசதானியாகவும், நாகதீவு (நயினாதீவு) பல நாகவரசர் களதும், சிற்றரசர்களினதும் இராசதானி யாகவும் இருந்தனவென நாம் அறியக் கூடியதாக இருக்கிறது

கி.மு.563ஆம் ஆண்டு தொடக்கம் கி.மு.483ஆம் ஆண்டு வரை வாழ்ந்த புத்த பெருமான் குலோதரன், மகோதரன் என்னும் நாகவிளவரசர்களுக்கிடையில் ஒரு மணிபதித்த அரச பீடத்தைப் பற்றியேற்பட்ட பிணக்கிற் சமாதானஞ் செய்துள்ளார். ஆகவே, கி.மு.483இன் முன் யாழ்ப்பாணக் குடா நாட்டில் குடிமக்கள் வாழ்ந்தனர். அரசர்களுமிருந்தனர்.

எல்லாள மன்னன் (கி.மு.2ஆம் நூற்றாண்டு) காலத்தில் அல்லது குலசேகர சிங்கையாரியச் சக்கர வர்த்தி (கி.பி.13ஆம் நூற்றாண்டு) காலத்தில் யாழ்ப்பாடி எனக் கூறப்படும் அந்தக் கவிவீரராக முதலியார் யாழ்ப்பாணத்தைப் பரிசிலாகப் பெற்று, இந்தியாவில் இருந்து சனங்களைக் கொண்டு வந்தார் என்பதும், அவர் மணற்றிடர் என்ற யாழ்ப்பாணக் குடா நாட்டைக் காடு திருத்தி நாடாக்கினாரென்பதும் கதையாக உண்டு.

மதுரையில் மாநாய்கன் என்னுமொரு வைசியர் இருந்தாரெனவும், அவரே நயினாதீவு வடகீழ் திசையில் நாக பூஷணிக்கொரு சிறந்த ஆலயம் கட்ட வித்தாரெனவும் மதுரை வைசியர் களிடமிருந்த பெற்ற ஏடுகள் கூறுகின்றன.

மாநாய்கன் என்னும் வைசியரே நயினார் பட்ட ரென்ற அந்தணரையும், கண்ணப்பன் என்ற வேளாளரையும் நயினா தீவுக்குத் கொண்டு வந்தார். அக்காலத்தில் நாகதீவெனவே வழங்கப்பட்டது. நயினார் பட்டர் அறிவிற் சிறந்தவராகவும், அரசினர் தொடர்புடையவராகவும் வாழ்ந்தபடியால் தனது ஞாபகத்தைப் பிற்காலத்தவரும் நினைக்க விரும்பி நாக நயினாதீவு என மாற்றினார்.

இந்தியாவிற் சிதம்பரத்தைத் தில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெனவும் அழைப்பர். அங்கேயுள்ள ஆலயங்களுக்குத் தேவையான பூக்களைப் பெறு வதற்காக நயினாதீவுத் தில்லை வெளியில் ஒரு பெரிய பூந்தோட்ட மமைக்கப்படடுப் பூக்கள் சிதம் பரத்துக்குக் கொண்டு செல்லப் பட்டன.

தில்லைக் கோயிலுக்குத் தேவையான பூந்தோட்டமாகையாற் தில்லைப் பூந்தோட்டமென அழைக்கப்பட்டது. காலப் போக்கில் இந்தியாவிலே தேவையான பூக்கள் கிடைத்தமையால் இத்தோட்டம் கைவிடப்பட்டு பூமரங்கள் அழிந்து, பரந்த சமவெளியாகியபடியால் தில்லை வெளி யென அழைக்கப்படுகிறது.

இப்பகுதி தற் போது பிடாரி கோயில் இருக்கின்ற பகுதியாகும். தில்லை வெளி என்னும் காணி தோம்பேட்டில் 200 பரப்புடையதாகக் காணப்படுகிறது. சிதம்பரக் கோயிலின் முற்கால ஏடுகளில் இவ்விபரங்கள் காணப் பட்டதாக அறியக்கிடக்கின்றது.

புத்தர் பெருமான் கி.மு.523இற்கும் கி.மு.483 இற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாக வழிபாடியற்றியிருக்க வேண்டும். அவர் வந்தபோது ஏற்பட்ட அரச சபைப் பிணக்கையும் தீர்த்து வைத்துள்ளார். சாவக நாட்டு மன்னன் புத்தரது பாதபீடிகையைத் தரிசிக்க மரக்கல மேறி வந்தனனென மணிமேகலை கூறும், பர்மாவில் இருந்து தர்மசோக மகா ராசா புத்திரசோகத்தால் வருந்தி

நாக வழிபாடியற்றிப் புத்திரப் பேறடைய நாகதீவு வந்தாரென அறியக் கிடக்கிறது.

பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனன் நாகவழிபாடியற்ற மணிபுரத் துக்கு வந்த நாககன்னிகையை மணஞ் செய்து பப்பிர வாகன் என்னும் புத்திரனைப் பெற்றானெனவும், பப்பிர வாகனது பெயரே பப்பிரவாகன் சல்லி யென ஸ்ரீ நாகபூஷணி ஆலயம் அமைந்த விடமென அறியக் கிடக்கின்றத. ஆபுத்திரன் வந்த அட்சயபாத்திரமெனும் அமுத சுரபியைக் கோமுகிப் பொய்கை யிலிட்டுச் சென்றான்

நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழ வரசன் யாத்திரை காரணமாக மணி பல்லவத்துக்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து அதன் பேறாகத் தொண்டை மான் இளந்திரயனைப் பெற்றா னென யாழ்ப்பாணச் சரித்திர நூல் கூறும்

நயினாதீவில் கிரேக்க, உரோம, இந்திய, சீனப் பழைய நாண யங்கள் காலத்துக்குக் காலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சீனாவிற் கி.பி.12ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட சாடிகள் நயினாதீவு கிணறு ஒன்றிற் கண்டு பிடிக்கப்பட்டன. மகாபராக்கிரம பாகு வின் சிலசாசனப்படி அநேக வெளி நாட்டுப் பிரயாணக் கப்பல்களும், வணிகக் கப்பல்களும் நயினாதீவு துறைமுகங் களுக்கு வந்துள்ளன.

போர்த்துக்கேயர் வருகை நயினா தீவுக்குப் பெரும் நட்டத்தையே விளை வித்திருக்கிறது. நாகபூஷணியம்மன் கோயில் முற்றாக அழிக்கப்பட்டது. பொருள்கள் சூறையாடப் பட்டன. இக்காலம் கி.பி.1620 இற்கும் கி.பி1624 இற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம். கி.பி.1623இல் பறங்கிய ரால் காணித் தோம்பேடுகள் எழுதப்பட்டதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத இடமுண்டு. ஆனால் கி.பி.1645இல் தொம் பிலிப்மஸ்கறிஞ்ஞா அவர்களால் திருத்தமான தோம்பேடுகள் எழுதப் பட்டன.

அக்காலத்தில் நயினாதீவில் நிரந்தரக் குடிபதிகளாகவிருந்தவர்களுக்குத் தான் நயினாதீவுத் தோம்பேடுகளில் காணிகள் காணப்படுகின்றன.

ஒல்லாந்தர் காலத்தில் நயினாதீவுக் கடலில் சங்கு குளித்தற் தொழில் மிக விசேடம் பெற்றுள்ளது. அவர்கள் காலத்தில் நயினாதீவு கோவிற் பற்று நொத்தாராகவும், கிராம வரி அறவிடுபவராகவும் இராமச் சந்திரர் கதிரித்தம்பி நியமிக்கப்பட்டார். போத்துக்கேயர் அழித்த கோயில் திரும்பச் சிறிதாகக் கட்டப்பட்டிருந்தது. அதையே ஒல்லாந்தர் அழிக்கமுற்பட்டனர். கட்டிய காலம் கி.பி.1788. கட்டுவித்தவர். இராமலிங்கர் இராமச்சந்திரர் ஆவார் .( இந்த இராமச்சந்திரர் சுந்தரலி ங்கத்தரின் அப்பர் அல்ல )

இவர்காலத்தில் கி.பி.1792இல் ஒல்லாந்தர் நாகபூஷணியம்மன் தேவால யத்தை அழித்துச் சூறையாட வந்தன ரெனவும், அவர் அவர்களை சமாதானம் செய்து கிராவரிகளை அறவிட்டுக் கொடுத்தார் இதனால்

ஒல்லாந்தர் தமது பட்டத்தை இவ ருக்கு வழங்கிப் பிறான்சிக் கதிரித்தம்பி என அழைத்தனர்.என்றும் கதைகள் உண்டு

இவரது கையொப்பங்கள் எல்லாம் யாழ்ப்பாணக் காணிக் கச்சேரில் பிறன்சீக் கதிரித்தம்பி எனவே அமைந் துள்ளன.

இவர்கள் காலத்திற் தான் தூத்துக் குடி முஸ்லிங்கள் நயினாதீவில் வந்து குடியேறி செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இவர்கள் இங்கு தென்னந் தோட்டங் கள் அமைத்தனர். பள்ளிவாசல் ஒன்றையு மமைத்தனர்

1815இல் தான் இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆளுமையின் கீழ் வந்தது.

நயினாதீவு வடமாகாணத்தில் யாழ்ப் பாணப் பெரும்பிரிவில் தீவுப்பகுதி மணிய காரனின் நிர்வாகம் என்னும் பெயரின் கீழ் ஒரு பகுதியாக அமைந்தது.

நிர்வாகப் பரவலாக்கலுக்காக உடை யாரும் விதானையாரும் நியமிக்கப் பட்டனர்.

பிற்காலத்தில் மணியகாரன் முறை மாற்றமடைந்து தீவுப்பகுதிக் காரியாதி காரியின் கீழ் நிர்வாகம் மாறியது.

விதானையென்ற ஒரு தலைமையின் கீழ் பொதுமக்களது விவகாரங்களும் அரசினரின் விவகாரங்களும் அமைந்தன.

கிராமச் சங்க முறை உருவாகியது.

மக்களாற் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கிராமச் சங்கங்களில் பதவி பெற்றனர்

4-2-1948இல் இலங்கை சுதந்திர மடைந்தவுடன் நயினாதீவு தீவிரமாக முன் னேற்றமடைந்தது. ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவாலயமும், ஸ்ரீநாக விகாரையும் மிகவும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினார் பட்டர் காலம் கி.பி.3ஆம் நூற்றாண்டில் நாகபூஷணி அம்பாளின் பூசை செய்வதற்காக மா நாயக்கன் என்னும் வணிகராற் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வரவழைக்கப் பட்டார்.

பட்டர் மரபிற் பல பிரிவுகள் உண்டு. அவையாவன: சம்பந்தப் பட்டர், வையக் கரைப் பட்டர், பிள்ளையார் பட்டர், அத்தியயனப்பட்டர், பாம்புக் குட்டிப் பட்டர் என ஐம்பெரும் பிரிவாகும்.

நயினார்பட்டர் பாம்புக்குட்டிப் பட்டரின் மரபினராகும்.

நயினார்பட்டரின் 20ஆம் சந்ததி யினரான இளைதம்பி உடையாரே பட்டர் மரபிலுள்ள ஸ்ரீநாகபூஷணி பூசை செய்த கடைசி அருச்சகராவார். நயினார் பட்டர் குடியிருந்த காணியே தற்போது 7ஆம் வட்டாரத்தில் பட்டர்வளவு என அழைக்கப்படுகிறது.

கி.பி.2ஆம் நூற்றாண்டில் வெடியர சன் என்னுமரசன் நெடும் தீவை தலை நகராகக் கொண்டு தீவுப்பகுதிகளை அரசாண்டான். அவனது ராணி நீலகேசி.

அக் காலத்திற் கண்ணகியின் காற் சிலம்புக்குத் தேவையான நாகரத்தினம் வாங்க மீகாமன் என்னும் வணிகனொருவன் சோழ வரசனின் உத்தரவு பெற்று இன்னும் பல வணிகர் களுடனும் வேலையாட் களுடனும் நயினாதீவை நோக்கி வந்தான்

வெடியரசனின் இராசதானி நெடுந் தீவு. வெடியரசனின் இராசப்பிரதிநிதி களில் ஒருவன் நயினாதீவில் இருந்தான். அவன் மீகாமனை நயினாதீவில் இறங்க விடாமற் தடுத்து அவனது வரவை வெடியரசனுக்கு அறிவித்தான். மீகாமன் வெடியரசன் சமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டான்.

மீகாமன் நாகரத்தினம் வாங்கவந்த தாகக் கூறியும்நம்பமுடியாத வெடியரசன் கோபத்துடன் மீகாமனுடன் சண்டை செய்தான்.

போர் நடப்பதாக எண்ணிய ராணி நீலகேசி தனது மைத்துனருள் ஒருவரான விரநாராயண தேவனுக்கு விடயத்தைத் தெரிவிக்க அவன் வந்து ஆராய்ந்து

விடயத்தைவிளக்கமின்றி அறியாமல் மீகாமனுடன் சண்டை செய்தான். அச்சண்டையில் வீரநாராயணன் இறந்து விடுகிறான்

வெடியரசனின் ஏனைய சகோதரர் களான விளங்கு தேவன், போர்வீர கண்டன், ஏரிலங் குருவன் ஆகிய மூவரும் தத்தம் சேனையுடன் வந்து மீகாமனுடன் சண்டை செய்கின்றனர்.

மீகாமன் சரணடைகின்றான். மீகா மனை வெடியரசனின் முன்கொண்டு செல்ல அவன் தான் வந்த நோக்கம் நாகரத்தினம் பெறவேயென்றும், நாட்டைப் பிடிக்கவல்லவென்றும் கூறுகிறான்.

வேண்டிய பெறுமதியைப் பெற்றுக் கொண்டு மீகாமனுக்கு நாகரத்தின கத்தைக் கொடுங்கள் என வெடி யரசன் கூறத் தம்பியார் அப்படியே செய்கின்றனர். மீகாமன் சோழ நாடு சென்றடைகின்றான்.

இச் சம்பவம் மிகைப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்ட தாகக் கருத இடமுண்டு

முன்னொரு காலத்தில் நயினாதீவி லுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம்.

ஒரு நாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்பொருட்டுப் பூவொன்றை வாயில் வைத்துக்கொண்டு புளியந்தீவி லிருந்து நயினாதீவு நோக்கிக் கடலில் வரும்வழியில், ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது.

கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டது. கருடன் அந்நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரே யிருந்த கல்லொன்றின் மீதிருந்தது.

அவ் வேளையில் அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற மாநாயக்கன் என்ற வைசிய வணிகன் , அந்நாகத்தின் பயத்தை யறிந்ததுமன்றி, அதன் வாயில் ஒரு பூவைத்திருப்பதையு முணர்ந்து, கருடனைப் பார்த்து தேவி பூசைக்குச் செல்லும் நாகத்தை மறியாதே எனக் கூறினான்.

உடனே கருடன் உனது செல்வத்தைக் கொண்டு வந்து நாகம்மாளுக்குக் கொடுப்பாயாயின் நான் விலகுவேன் எனக்கூறியதாம் . வணிகன் உடன்படக் கருடன் விலகியது. நாகம் தனது நன்றி யுணர்ச்சியைத் தெரிவித்து நயினா தீவையடைந்ததாம் .

வணிகன் தனது நாட்டுக்குச் சென்று மனைவிக்கு நடந்தவற்றைக் கூறினான். அன்றிரவு இருவரும் நித்திரை கொள்ளும் போது ஒரு பேரொளி தோன்றி அவர் களது கண்களைக் கூச வைத்தது.

அவர்கள் எழும்பிப் பார்த்தபோது நாகரத்தினங்களைக் கண்டுவியப்புற்று நயினாதீவுக்கு வந்து தீவின் வடகீழ் திசையில் ஏழுவீதிகளும், இராசகோபுர மும் அமைந்த ஒரு பெரிய ஆலயமும் கட்டுவித்தனர். பாம்பு சுற்றியகல் பாம்புசுற்றிக் கல்லெனவும், கருடன் இருந்த கல் கருடன் கல்லெனவும் அழைக்கப்படுகின்றன.

நாகர் வாழ்ந்த காலத்திலிருந்தே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கிறார் கள். ஏறக்குறையப் பதினாலாயிரம் வருடங்களுக்கு முன்பே நயினாதீவில் குடியேற்ற மிருந்திருக்க வேண்டும். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நாக பூஷணியம்மன் மூலஸ் தானத்திலுள்ள நாகம் பதினாலாயிரம் வருடங்களுக்கு மேற்பட்டதெனக் கட்டிடக் கலை, சிற்பக்கலைப் பொறியியல் நிபுண ரான திரு.எம்.நரசிம்மன் அவர்கள் கருது கிறார். ஆகவே, நாகர் குடியேற்றம் பதினாலாயிரம் வருடங்களுக்கு முன்னெனக் கருதலாம். மக்களில்லாமல் வழிபாடு இருந்திருக்க முடியாது.

கி.மு.563இற் பிறந்து கி.மு.483ஆம் ஆண்டிற்கிடையில் வாழ்ந்த புத்தபெரு மான் குலோதரன் மகோதரன் என்பவர் களது அரசபீடச் சண்டையில் சமாதானஞ் செய்திருக்கிறார். புத்தர் பெருமான் தனது 35ஆம் வயதில் இருந்து 80ஆம் வயது வரை யாத்திரைகளிலும், தர்ம உபதேசங் களிலும், பஞ்சசீலக் கொள்கைகளைப் பரப்புவதிலும் தனது காலத்தைச் செல விட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை, மணிமேகலா தெய்வத் தால், மணிபல்லவத்துக்குக் கொண்டுவரப் பட்டாளென மணிமேகலையென்ற நூல் கூறும், மணிமேகலையின் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு, சீத்தலைச் சாத்தனார் என்னும் பெரும் புலவரே மணிமேகலை யென்ற நூலின் ஆசிரிய ராவார். அவர் கடைச்சங்க காலப்புலவர், சேரன் செங்குட்டுவன் என்ற பேரரசனின் சிறந்த நண்பர்.

மலைவளங் காணச் சென்ற சேரன் செங்குட்டுவனுக்கு கண்ணகியால் மதுரை யடைந்த கேவல நிலையை விளக்கினார். சேரன் செங்குட்டுவன் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டெனக் கலைக் களஞ்சியம் 5ஆம் தொகுதி எடுத்தியம்புகின்றது. ஆகவே மணி மேகலை மணிபல்லவத்துக்கு வந்த காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டெனவே கூறலாம்.

நயினாதீவில் இந்து, பௌத்த, இஸ்லாம், கிறீஸ்த சமயங்கள் எல்லாவற்றுக்கும் கோயில்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விசேட காலங்களிலும், பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் தினந் தோறும் வந்து சகல கோயில்களிலும் அஞ்சலி செய்கின்றனர். ஆகவே இலங்கை யில் சகல மதத்தவர்களுக்கும் சாந்தியளிக்குமிடமாக நயினாதீவு அமைந்திருக்கிறது.. இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரங்களால் இடம் பெயர்ந்து ,பின் புலம் பெயர்ந்து மதம் பண்பாடு மொழி அழிகின்ற நிலையில் பழம் பெருமைகள் பேசி

வாழ்வதைக் காணுகிறோம்
பாரதி சொன்னது போல தமிழ்
இனிச் சாகுமோ?

## வேண்டும்... வேண்டாம்...

ஆண்

நீயெனக்கு வேணுமடி நீதான் அன்பே
நினைத்தாலே இனிக்கின்றாய் ஏக்கம் கொண்டேன்
வாயென்றே அழைக்கின்றேன் வருவாய் தானே
வந்திடுவாய் எனக்கதுவும் தெரியும் மானே
தீயனவே சுடுகின்றாய் திரும்பிப் பார்த்தாலே
திருடிடுவேன் உன் மனத்தை திருடி நானும்
மாயமானாய்த் துள்ளுகின்றாய் மனத்தின் உள்ளே
மயங்குகின்றேன் உன்னாலே வாடி யம்மா

பெண்

நீங்களென்றும் வேண்டாமே போங்க ளய்யா
நினைத்தாலே இனிக்கின்றீர் ஏனோ ஐயா
தீயயெண்ணம் எமக்கில்லை திருடிச் சென்றீர்
திரும்பிடாத இருந்தபோதும் உள்ளம் தொட்டீர்
நோயாளி போலானேன் நோதல் கொண்டு
நொடிப்போதும் உம்நினைவால் போங்கள் ஐயா
வாயென்றால் நானுந்தான் வரவும் மாட்டேன்
வரமாட்டேன் வரமாட்டேன் போங்கள் ஐயா

பெண்

எப்போதும் காதலென்று எண்ணிக் கொண்டே
ஏக்கமாக இருக்கின்றீர் என்ன செய்ய
முப்போதும் கற்பனைகள் முழுது மாக
முள்ளெனவே குத்திடுதே முடிந்தால் என்னை
தப்பிதமாய்த் தொட்டாலும் தவறே அய்யா
தாலியொன்று வேலியானால் கவலை இல்லை
இப்படித்தான் இருந்திடுவேன் இதய மின்றி
இப்போதே மணமுடிக்க இங்கே வாரீர்

தமிழ்நெஞ்சம் அமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே நாள்:
# தொழில் நுட்ப யுகத்தில்

## சிவா முருகுப்பிள்ளை ஈஸ்வரமூர்த்தி

பயிற்சி... செயன்முறைப் பயிற்சி.... இடைக்காலத் தேர்வு... இறுதித் தேர்வு என அடுத்த 20 வருடத்திற்கான தொழில் நுட்பம் ஒன்றிற்கான பயிற்சி ஒன்றில் கடந்த இரு கிழமை ஈடுபட்டிருந்தேன்.

சாதாரணமாக ஒரு வருடம் வரை எடுத்துப் படிக்க வேண்டிய விடயத்தை 30 ஆண்டுகளுக்கு முன்பு இரு மாதம் என்று சுருக்கி பின்பு 10 ஆண்டுகளுக்கு முன்பு அதனை ஒரு மாதமாக வெட்டித் தறித்து இன்று இரு கிழமைப் படிப்பு பயிற்சி ஆக்கிவிட்டார்கள்.



அப்படி ஒரு கற்பித்தலில் காசு சேமிப்பு என்ற வேகமான ஓட்டக் கல்வி. மிகுதியை சுயமாக பார்த்துக்கோ.... படிச்சுக்கோ... என்றாகிவிட்டது.

அறிவை கற்பித்தலில் கூடச் சுரண்டலாக மாறிய பல்தேசிய நிறுவனங்களின் வளர்ச்சி நவீன இயந்திரங்கள் ரோபோக்களாக (Robo) உருவாக்கப்பட்டு பல மனிதர்கள் செய்த தொழிலை தானாகச் செய்து முடிக்கும் இயந்திர மயமாக்கப்படல்கள்.

இந்த இயந்திரங்களுடன் இயந்திரமாக உடல் உழைப்பாக... மூளை உழைப்பாக புதிதாக இணைக்கப்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி இயந்திரங்கள் மனிதனுக்கான வேலை அளவை குறைத்து அவனுக்காக ஓய்வு, பொழுது போக்கு, விருப்பமான துறையில் தேடுதல் என்பதாக பயன்படுத்துவதற்கு எற்ற சூழலை ஏற்படுத்தும் என்றால் உண்மை இல்லாமல் இல்லை.

ஆனால் நடப்பது என்ன...? பல் தேசியக் நிறுவனங்களின் செயற்பாடுகள் இயந்திரங்கள், மனிதர்களின் வேலையைப் பறிக்கும் வில்லனாக உருவெடுக்கும் அவலங்களை எற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர்.

போகும் இடம் எல்லாம் மனிதர்கள் இன்முகத்துடன் வரவேற்று ஆரத் தழுவி அணைத்து உதவும் சேவை செய்வதை தவிர்த்து....

இயந்திரம் ஒன்று உங்களை வரவேற்கும் நிலமைகள் இன்று அதிகமாகிக் கொண்டு இருக்கின்றது.

இதனை நீங்கள் நிதித்துறையில் அன்றாட வங்கி பணப் பரிமாற்றங்களில் அது சார்ந்த இயந்திரங்களில் காண முடியும்.

இதற்கு அப்பாலும் காண முடியும்... விமான நிலையங்களில் பயணம் செய்யும் போது உங்களுக்கான பயண அனுமதி... கொண்டு செல்லும் பொதிகளுக்கான அனுமதிச் சீட்டு என்று எல்லாம் இயந்திரங்களே வழங்குகின்றன.

என்ன கடவுச்சீட்டை விமான நிலையத்திற்குள்ளே செல்லும் போது கள்ளன் காவலர் விளையாட்டுப் போல் தேர்வுசெய்துத் தடை போடும் மனிதர்களும் வில்லன்களாக என்று எங்கும் மனிதனை அவனுக்கே உரித்தான வரவேற்றல் இன்முகம் என்பதை தவிர்த்து இயந்திரத்துடன் இயந்திரமாக இன்னொரு உணர்வற்ற உயிராக அதிகரிக்கும் நிலமைகள் இப்போது.

இதுதான் இன்று ஒரு தொழிலாளியின் நிலமைகள். இதற்கு பின்னால் பல் தேசியக் நிறுவனங்களின் இலாபம் ஒன்றே என்ற சுரண்டல்கள்.

இது மருத்துவத் துறையிலும் இன்று அதிகரித்துவிட்டது.

'கல்விக் கூடங்களிலும் ஆசிரியரைப் பார்க்காமல் அவரைக் 'காதலிக்காமல்' எங்கோ இரு முனையில் இருந்த வண்ணம் வெள்ளித் திரையில் காணும் பூங்குழலியாக கற்பனை பண்ணும் அவலங்கள்.

தகவல் தொழில்நுட்பத் துறை, மருத்துவத் துறை, விவசாயம், விற்பனைத் துறை, சமையல் கரை என்று எல்லாவற்றிலும் இயந்திர மயமாக்கல்.

வேலைகளை இலகுவாக்குகின்றது என்பது உண்மை.

ஆனால் இந்த இலகுவாக்கலால் ஏற்படும் நேரம் சேமிப்புகள், ஓய்வுகள் தொழிலாளர்களுக்கு வழங்கப் படுகின்றனவா...?

இதனால் கிடைக்கும் வருமானம் தொழிலாளியிற்கு வழங்கப்படுகின்றனவா என்பதே கேள்வியாகி அது இல்லை என்றாகி நிற்கின்றது.

மாறாக இந்த நேர மிச்சங்களை தொழிலாளர்களின் வேலைப் பறிப்பு சம்பளப் பறிப்பு என்றாக மாறியிருக்கின்றது . இதனைச் செய்பவர்கள் இந்த பல்தேசிய நிறுவனங்கள்.

இப்படியான ஒரு விடயத்திற்காகவே நானும் இந்த 66 வயதில்.... ஓய்வு வயதான 55 இற்கு பிற்பட்ட 11 வருடத்தில் கல்விப் பயிற்சியை முடித்து விட்டு வந்திருக்கின்றேன்.

இது எனக்கான பட்டறிவு மட்டும் அல்ல இன்று பலருக்குமான பட்டறிவு. எனவே இது பற்றி ஒரு விரிவான பதிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மேநாளில் வரைகின்றேன்.

வழங்கப்பட்ட பயிற்சி இன்னும் சிலரின் வேலைகளை பறிப்பதற்கு பயன் படப் போகின்றது.

தற்போதையை தகவல் தொழில் நுட்ப துறை வேலையில் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எனது குழுவில் 12 பேருடன் ஆரம்பமான வேலை இன்று ஆறு பேர் என்ற அளவிற்கு வேலை ஆளணிக் குறைப்பாக மாறி இருக்கின்றது.

ஆனால் வேலையின் அளவு அதே யளவு....? சற்று அதிகமாகி இருக்கின்றது.

குறைக்கப்பட்ட ஆளணிகளுக்கு பதிலாக இயந்திரங்கள் வந்திருக்கின்றன. இணைக்கப்பட்டுள்ளன.

மனிதர்களை விட இயந்திரம் சொல்லும் முடிவுகளை, செயற்பாடுகளை நம்பும் நிலமையில் கல்விப் பயிற்சியை தவிர்க்க முடியாமல் எனது 66 வயதில் முடித்து விட்டு வந்திருக்கின்றேன்.

இதே மாதிரியான குரல் உலகின் பல பாகங்களிலும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

க.பொ.த உயர்தர வகுப்பு இறுதித் தேர்வு போல் ஜேர்மன் நாட்டவரின் தொழில்நுட்பம் அவர்களின் தேர்வுமுறை என 5000 அளவான கேள்விகளில் 30 கேள்விகளை தேர்வு வைக்கும் இயந்திரம் எழுமாறாக தெரிவு செய்து கேள்வி ஒன்றிற்கு இரண்டு நிமையம் என்பதாக ஒரு விடை, பல விடை என்று ஐந்துவரை விரியும் விடை(ஷ) தேர்வு இது.

தேர்வு மண்டபத்தை விட்டு இந்த வயதில் ஓட வேண்டும் என்ற கடினமான தேர்வுகள். உண்மையில் ஓடவும் முடியாது காரணம் வயது அப்படி.

ஆனாலும் 85 சதவிகிதம் எடுத்தால் சித்தி என்ற நிலையில் அதற்கு மேலே எடுத்து வெற்றி பெற்ற சிறுபிள்ளைக் குதூகலம். மகளிடம் இருந்து வந்த 'Good Appa', 'Excellent' என்ற பாராட்டுகள்.

இதுதான் தொழில் நுட்பம் அதிகமாக உள்ள IT தொழில்நுட்பத் துறையிலும் நிலமை.

அப்போ நாள் கூலியாக இயந்திரத் தின் வேகத்திற்கு ஏற்ப வேலை செய்யவேண்டிய தொழிற்சாலை வேலை யாட்களின் நிலமை...?

இப்படியான ஓர் உலக ஒழுங்கில் எவ்வாறான சுரண்டல்களுக்குள் உள்ளா கின்றார்கள் என்று கணிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

எனது வகுப்பில் நான்கு மாணவர் கள். என்னை விட வயதில் முதிர்ந்த ஆங்கிலேயர் ஒருவர். மற்ற ஒருவர் பிரெஞ் மொழியைத் தாய் மொழியாக கொண்டவர். மற்றவரும் சற்று இளமை யான ஆங்கிலேயர், தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்ட நான்.

இலங்கையில் எப்படி தமிழ் பேசும் மக்கள் எண்ணிக்கையில் குறைந்த வர்களாக உரிமைகள் மறுக்கப்படும் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக உணருகின்றார்களோ அதே நிலமை பிரஞ்சுக்காரர்களும் இங்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியூபெக் என்ற மகாணத்தில் அவர்கள் செறிந்து வாழும் இந்த மக்கள் பிரிந்து செல்வதற்கான உணர்வுடன் சில ஆண்டுகளுக்கு முன்பு பொது மக்கள் வாக்கெடுப்பில் ஈடுபட்டு மிகச் சிறிய வாக்கு வேறுபாட்டில் தோற்றவர்கள்.

ஆனாலும் தம்மை இரண்டாம் தர குடியுரிமையாளர்களாக வெள்ளையினம் மேலாதிக்கம் நடாத்துவதாக அவர்கள் உணருகின்றார்கள் என்பதை எங்களுக்கு கற்பித்த பிரஞ்சை தாய் மொழியாக கொண்ட ஆசிரியர் நேரடியாக இல்லா விட்டாலும் மறைமுகமாக குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்.

இது என்னால் உணரப்பட்டது. மிகவும் சிறந்த அளவில் இரு மொழிகளை யும் பேசும் ஆசிரியர் ஆங்கிலத்தில் கற்பித்தல் என்றாக இருக்க எங்கள் சக பிரஞ் மாணவன் சற்று மொழிப் புலமை காரணமாக சிரமப்பட்டார்.

அவர் வேலை செய்யும் இடத்தில் அவர் பிரஞ் மொழியில் வேலை செய்வதாக அறிந்தேன்.

மொழிச் சிறுப்பான்மை, தொழிலா ளர் என்ற சுரண்டல், பாகுபடுத்திப் பார்த்தல், இயந்திரங்கள் மனிதர்களின் வேலைகளை பறித்தல் என்பதாக பல்தேசிய நிறுவனங்களின் தொழில் நுட்ப இணைப்புக்கள் என்றாக சுரண்டல்கள் அதிகரித்து வரும் சூழலில் நாம் இந்த ஆண்டு மே நாளை அடைந்திருக்கின்றோம்.

8 மணி நேரம் வேலை செய்து மிகுதி எட்டு, எட்டாக நேரத்தை பொழுது போக்கு, ஓய்வு என்றான நிலமைகளும் கிழமையில் இரு நாள்கள் ஓய்வு என்று 150 (1800 களின் பிற் பகுதியில் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் தொழிலாளர்களின் தொடர்ச்சியான போராட்டத்தினால் கிடைக்கப் பெற்றது ஆண்டுகளுக்கு முன்பு போராடிப் பெற்றவை பலருக்கும் கனவாகிப்... பொய்யாகிக் கொண்டிருக்கின்றது.

## தொலைந்து போன கவிதையும் தொலைநாள் போன இதழ்களும்

காலமெனும் சந்தர்ப்பம்
காற்றாக விரைந்தே போகும்
நாமதிலே நின்றோமானால்
நயமின்றி நட்டமாவோம்

செய்வதை தவற விட்டால்
நாளும் நாளும் ஏங்கி நிற்போம்
பொய்யில்லை இதுதான் உண்மை
புரிந்துகொள் மனிதா என்றும்

சூரியன் மறைந்து போனால்
சூழல்தான் என்னவாகும்
பாரினில் பருவம் ஏது
பயன்பெறு வாழ்வு ஏது

வானிலை பொய்த்த தாலே
வறுமைதான் மேலாம் இன்று
கானலே நாளும் பெய்யும்
கார்மேகம் மறந்ததாலே

சூழ்நிலை பலவும் மாறும்
சொல்லி நாம் காண்பதென்ன
பாழ்பட்ட தடைகள் நின்று
பயன்பல கெட்டே போச்சு

நிதானங்கள் நிறைய வேண்டும்
நிம்மதி அதிலே வேண்டும்
எடுத்துக்காட்டுத் தேவையில்லை
ஒன்றுதான் இதுவே போதும்

**சேனையூர்.இரா.இரத்தினா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்கான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு தினம் 12 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தல் வாரம் ஒரு நாள் தவிர்த்து 6 நாட்கள் கட்டாயம் வேலை செய்தல் என்றாக உலக பொருளாதாரம் பெரும் தொற்று, யுத்தம், பொருளாதாரத் தடை, முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளினால் சிக்கித் தவிக்கின்றது.

கடன் வாங்கி வாழ்கை நடத்தும் நிலையில் குடும்பங்கள் மட்டும் அல்ல இலங்கை போன்ற நாடுகளும் தள்ளப்பட்டிருக்கின்றன.

கடன் கொடுப்பவர்கள் கற்பை விலைக்குத் தா என்பதாக சாதாரண மக்களுக்கு உரிமையாக கிடைக்கும் கல்வி, மருத்துவம், ஓய்வூதியம், நியாய விலையில் மின்சாரம், தண்ணீர், மட்டுப்படுத்தப்பட்ட வரி என்பன வற்றில் உரிமைகளை மறு என்றாக எல்லாவற்றையும் பறிக்கும் செயற் பாடுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

தற்சார்புப் பொருளாதாரத்தில் பண்ட உற்பத்தியைச் சார்ந்த வாழ்க்கை முறை எம்மைக் காப்பாற்றும் என்பதை அதிகம் உணர மறுக்கும் நிலைமைகள் கடதாசிப் பொருளாதரத்தில் மட்டும் நம்பிக்கை வைக்கும் நிலமைகள்.

வங்கியில் இருக்கும் கடதாசிப் பணத்தின் அளவை மட்டும் வைத்துக் கொண்டு வாழ்க்கையை நடாத்தலாம் என்ற இளம் தலைமுறையினரின் அமேசனில் எல்லாவற்றையும் முன்பதிவு செய்து பெறலாம் என்ற சிந்தனையில் நுகர்வுக்கலாச்சாரத்திற்குள்விழ்த்தப்பட்ட உலகாக மாற்றியமைக்கப்பட்டிருக்கும் சுரண்டல்கள்.

அது 'Ubar' சோத்தில் இருந்து சுவர்மா வரை விட்டு வாசப்படியில் ஆனால் நாள் முடிவில் வங்கி கணக்கில் காட்டும் காசின் இலக்கம் மட்டும் பூச்சயத்திற்கு கீழே கட கடவென இறங்கும் நிலைமைகள்.....

இது வெருட்டல் அல்ல. நாம் எங்கே நிற்கின்றோம் என்ற எச்சரிக்கைகள்.

இந்நிலையில் உழைப்புச் சுரண்டல் கள். அது மூளைச் சுரண்டல்களாக தற்சார்பு தவிர்ந்த எமது செயற்பாடுகள் அதற்கு தவிர்க்க முடியாத ஏற்புடமையை எற்படுத்தியிருக்கும் நிலையில்...

உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் நாம் இழப்பதற்கு உயிரைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற நிலையில் கட்டிய கந்தலையாவது காப்பாற்றியாக வேண்டும்.

பண்டிகை நாள் ஒன்றில் எங்கோ எல்லாம் வேலை என்று அலைந்து பணத்தை திரட்டி இறுதியில் காலையில் கொண்டாட வேண்டிய பண்டிகையை மாலையில் அரைகுறையாக கொண்டா டும் கூலித் தொழிலாளியின் நிலமை போல் உலகத் தொழிலாளர் நாளின்முடிவு நேரத்தில் என் பதிவு வருகின்றது.... வேலையில் இருந்து திரும்பி வந்து.

அது... "**உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள் கடனை வழங்கு வதற்கான பணத்தை எம்மிடமே சுரண்டி எமக்கே கடனாக தரும் அந்த சுரண்டலுக்கு எதிராக அணிதிரண்டு போராடி எமது உழைப்பு உரிமையைக் காப்பாற்றிக் கொள்வோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏலாதென்று ஆர் சொன்னது?

**– நாவலடி சந்தியூரான்**



"நாலர மணிக்கு வருவன். வெளிக்கிட்டு தயாரா இருக்கோணும் சரியா. மூணு வீடுகளுக்கும் போயிற்று ஏழு மணிக்கெல்லாம் வீட்ட வந்தி ரோணும்"

"நான் தயாரா இருக்கிறது கிடக்கட்டும். நீங்க முதல்ல சரியான நேரத்துக்கு வரப்பாருங்க. அங்க போய், வாற போற ஆக்களோட கதைச்சிற்று நிக்காம கெதியா வரப்பாருங்க. அதோட வாங்கிறதெல்லாம் வாங்கிற்றும் வந்திருங்க"

"அட, வாங்கி வரச் சொல்லக் கொள்ள தான் எனக்கு இடிச்சிது. என்னென்ன வாங்கி வாறதெண்டு சொல்லன் பிள்ள, எனக்கும் வசதியா இருக்குமல்லோ"

"ம்...ம்... ஒண்டரக்கிலோ வாழைப் பழம்... ஒண்டரக்கிலோ பூசணிக்காய்... இஞ்சருங்க அர அர கிலோவா மூணு அரக்கிலோ வாங்கி ருங்க. புறவு அத வெட்டறது எனக்குச் சிக்கலாகிரும். அதோட வெள்ளரிக்காயும் அர அரக் கிலோவா மூணு"

"சரி சரி நான் வாறன். நீ வெளிக்கிடு என"

பதிலுக்குப் காத்திராமல் செல்வ ரெத்தினம் தனது மிதிவண்டியில் ஏறி அமர்ந்து கிடுகுப் படலையைத் திறந்து வெளியேறினார்.

தங்கரெத்தினம் கட்டியிருந்த சேலையை வீட்டிற்குள்ளே உடைகள் போட்டிருந்த இளக்கயிற்றால் கட்டியிருந்த கொடியில் போட்டு விட்டு, அந்தக் கொடியில் கிடந்த துவாயைக் கையில் எடுத்துக் கொண்டு போட்டிருந்த றவுக்கையை (சட்டையை)க் கழற்றிய வாறே பாவாடையை உயர்த்தி நெஞ்சுக்கு மேல் உடுத்திக்கொண்டு கிணற்றடிக்குச் சென்று துவாயை அங்கிருந்த கொடியில் போட்டுவிட்டு துலாவைப் பிடித்து கிணற்றில் தண்ணீரை அள்ளி தலையில் ஊற்றினார்.

பகல் முழுவதும் அது இது என்று செய்த வேலைகளாலும் பகல் சாப்பாட்டுக்கு அடுப்படியில் நெருப்புடன் போராடியதாலும் அவரது உடல் பிசு பிசுத்துக் கொண்டு இருந்ததுடன் களைப்பாகவும்

இருந்தது. அந்தக் களைப்பும் பிசு பிசுப்பும் தலையில் ஊற்றிய நீரினால் எங்கோ ஓடி மறைந்து காணாமல் போய் விட்டதாக தங்கரெத்தினம் உணர்ந்தார்.

தொடர்ந்து நாலு ஐந்து வாளிகளை அள்ளி தலையில் ஊற்றியபின் தலைக்கு சீயக்காய் வைத்துத்தேய்தார். உடலுக்கு இதமாக இருக்கும் என்ற நினைப்பில் சின்னப்பிள்ளைகளுக்குப் போடும் சவர்க்காரம் போட்டு உடல் முழுவதும் தேய்த்து மீண்டும் துலாவில் நீரை அள்ளி அள்ளி ஊற்றிக் குளித்தார்.

தங்கரெத்தினம் துலாவில் நீர் அள்ளும் போது மேலும் கீழும் துலா அசையும் போது கிரீச் கிரீச் என்ற சத்தமும் ஒருவிதமான இராகத்துடனான ஒலியும் தங்கரெத்தினத்தின் மனதிற்கு இதமாகவே இருந்தன. கொண்டக்கிளார் குருவியின் அவர்களது வீட்டு முற்றத்தில் நின்ற செவ்வரத்தைக் கிளைத்தாவல்கள் குளித்துக் கொண்டிருக்கும் மனதிற்கு இன்னும் இதம் கூட்டின.

அவற்றை இரசித்தபடியே குளித்து முடித்தவர் தலையை துவாயால் நன்கு துடைத்து உடலையையும் துடைத்து கட்டியிருந்த பாவாடையை கழற்றமுன் அந்த இடத்தில் தன் துவாயைக் கட்டிக் கொண்டு வீட்டிற்குள் சென்று அவரது உடுப்புகள் வைத்திருக்கும் றங்குப் பெட்டியில் மடித்து வைத்திருந்த தன் துணைவருக்குப் பிடித்தமான இளஞ் சிகப்பு நிற நூல் சேலையொன்றை உடுத்திக்கொண்டார்.

செல்வரெத்தினத்தை மணம் முடித்த நாளிலிருந்து தங்கரெத்தினம் அந்த றங்குப் பெட்டியில்தான் தனது உடுப்புகளை பேணிக் காத்து வந்தார். அவரது மூன்று பிள்ளைகளும் "உங்கட உடுப்புகள வைக்கிறதுக்கு நல்ல அழகான புதிய பெட்டி வாங்கித் தாறம்" என எவ்வளவோ எவ்வளவோ நாள்கள் சொல்லியும் அம்மா கேட்கவே இல்லை. "இந்த றங்குப்பெட்டி என்ர மாமி தந்தது. நாம மட்டக்களப்புக்கு இடம்பெயந்து போகக்கொள்ளயும் நான் பாரம் எண்டும் பாக்காம தலையில் வச்சு தூக்கிற்றுப் போய் குடியேறக்கொள்ள அங்க இருந்து கொண்டு வந்திருக்கிறன் உங்கட புதுப்பெட்டியில உடுப்பு வைச்சிருக்கயா" அம்மாவின் பதில் எப்போதும் இதுவாகவே இருந்திருக்கிறது. அந்தப் பெட்டியினை அம்மா வைத்திருப்பதில் அப்பாவுக்கும் உடன்பாடு இருப்பது தங்கரெத்தினத்திற்கு ஒரு பலமாக இருந்து வந்தது.

தங்கரெத்தினத்திற்கு செல்வரெத்தினம் மேல் கொள்ளை அன்பு. தனது மூன்று பிள்ளைகளையும் கட்டிக் கொடுத்த பின்னர் இருவரும் சம்புக்களியில்பத்தினியம்கோவிலுக்கு அண்மையில் அவர்களது வீட்டில் தனியாக வாழ்விழந்து வருகின்றனர். குடியிருக்கும் வளவினுள் சிறிய மரக்கறித் தோட்டம் வைத்திருந்தார்கள். கத்தரி, கொடிபோஞ்சி நட்டிருந்தார்கள். இன்னும் காய்க்காத பருவத்தில் அவை இருந்தன. காலை வேளைகளில் செல்வரெத்தினத்துக்கு பயிர்களுக்கிடையே புல் கொத்துவது பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது என பொழுதுகள் போகும்.

கிழமையொன்றில் மூன்று தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகள் என்றாலும் தமக்கு நெருக்க மான அல்லது தமக்குப் பிடித்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் அரை மணி நேரமோ ஒரு மணி நேரமோ இருந்து அளவளாவி மகிழ்ந்து வருவது வழக்கம்.

ஊரில் இவர்களைப் போல் யாருமே மகிழ்ச்சியாக இல்லை என்றே சொல்லலாம். இது ஊரார் அனைவருமே ஏற்றுக்கொண்ட உண்மையும் கூட. அவர்கள் மகிழ்ச்சியாக வாழப் பிறந்தவர்கள். வாழவும் தெரிந்தவர்கள்.

அன்றும் அப்படித்தான் தமக்கு நெருக்கமானவர்களின் வீடுகளுக்குச் செல்வதற்காகத்தான் நாவலடிச் சந்திக்குச் சென்று தங்கரெத்தினம் சொல்லி விட்டவற்றை வாங்கி வருவதற்கச் சென்றிருந்தார் செல்வரெத்தினம்.

முதல்நாள் இரவு இருவரும் எங்கு எங்கு செல்வதென்று கலந்து பேசி முடிவெடுத்தார்கள்.

"இஞ்சேரன் நாம நாளைக்கு அம்மன்நகரில செம்மணத்தாத்த வீட்ட போகோணும். அங்க போய் நாலு மாசம் எண்டாலும் இருக்கும்"

"ஏன் நாலு மாசம்... நல்லாச் சொன்னீங்க.. ஆறு மாசமாகிற்றுத் தெரியுமா"

"ஓம் என. சரி முதல்ல அங்க போவம். அப்பிடியே கயமுந்தானில சின்னாச்சியார் பெரியம்மா வீட்ட போயிற்று வருவமா?"

"கயமுந்தானுக்குப் போக ஏலா நாளைக்கு. செம்மணத்தாத்தயிற்றப் போயித்து தங்கபுரம் போய் மணிநாயகம் வீட்டயும் நாகநாதன் வீட்டயும் போயித்து வருவம். நாகநாதன் போன கிழமையும் வீட்ட வந்திற்றுப் போனவன். எல்லாற்ற வீட்டயும் போவீங்க. எங்கட வீட்ட மட்டும் வரமாட்டீங்க எண்டு குற வேற சொல்லித்துப் போனவன்" பேச்சுத் தொடரவில்லை. தங்க ரெத்தினத்தின் முடிவே சந்தானமானது.

செல்வரெத்தினம் வாங்கப் போன பொருட்களுடன் வாங்கியபின் மூன்று ஐம்பதிற்கு வந்திறங்கினார். "பூசணிக்கா இண்டைக்கு நல்ல மலிவுடியம்மா. கிலோ அம்பது தான். இண்டைக்கு சனிக்கிழம தானே. கிண்ணியாச் சந்தையில வாங்கி வந்திருப்பானுவள் போல கிடக்கு" சொல்லிக் கொண்டே தங்கரெத்தினத்திடம் கொடுக்க அவற்றையெல்லாம் வாங்கி மூன்று குடும்பங்களுக்கும் வாங்கிய பொருட் களைச் சமமாகப் போட்டு மூன்று பொதிகளாக்கினார் அவர். தங்களது வீட்டில் இருந்த புளிமா மரத்தில் ஏற்கனவே பிடுங்கி வைத்திருந்த இவ் விரண்டு மாங்காய்களை ஒவ்வொரு பொதியிலும் போட்டார்.

அவர்கள் சொன்னவாறே நாலரை மணிக்கு வீட்டிலிருந்து மிதிவண்டியில் புறப்பட்டு செம்மணத்தாத்த வீட்டிற்குச் சென்றார்கள். தங்கரெத்தினம் பின்னிருக்கையில் இருக்க மாலைநேரத் தென்றலை உணர்ந்தபடி செல்வ ரெத்தினம் மிதிவண்டியை ஓட்டிச் சென்றார்.

செம்மணத்தாத்தை வீட்டில் ஆத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் அவரது வீட்டுக் குந்தில் சாய்ந்து அமர்ந்திருந்தவாறு வெற்றிலை பாக்கினை சிறிய உரலில் போட்டு இரும்பு உலக்கையால் இடித்துக்கொண்டிருந்தார். இளைஞர்கள் இருவரையும் கண்டவுடன் ஆத்தையின் முகம் அவரை அறியாமலே மலர்ந்தது. அவரது மகனும் மருமகளும் பேரப்பிள்ளைகளும் கட்டைப்பறிச்சான் போயிருப்பதாகவும் இன்னும் கொஞ்சநேரத்தில் வந்து விடுவார்கள் என்றும் செம்மணத்தாத்தை சொன்னார். கொண்டு வந்த பொதியில் ஒன்றை ஆத்தையிடம் கொடுத்தார் தங்கரெத்தினம்.

"இதெல்லாம் என்னத்துக்குப் பிள்ள. நீங்க வாறதே காணாதா.." இளைஞர்கள் இருவரும் புன்முறுவலைப் பதிலாக்கினர்.

அவர்கள் இருவரும் இப்படி சொந்த பந்தங்களைப் பார்க்கப் போகும் போது கடைகளில்இருக்கும்இனிப்புப்பண்டங் களோ அல்லது தயாரித்த பொருட் களோ என்றைக்குமே கொண்டு செல்வதில்லை. ஏதாவது மரக்கறி அதனோடு ஏதாவது ஒரு பழம் என உடலுக்கு நன்மை தருகின்ற அதேவேளை அந்த வீட்டிற்குப் பயன்தரக்கூடியவற்றை வாங்கிச் செல்வது வழக்கம். இவர்கள் செல்லும் வீடுகளில் உள்ளவர்கள் கூட இவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தனர்.


தங்கரெத்தினம் கொண்டு வந்த பொதியினைப் பிரித்து ஒரு மாங் காயைச் சீவி, சிறிய துண்டுகளாக்கிய பின் சமயலறைக்குச் சென்று உப்பு இருந்த சிறிய குடுவையை எடுத்து வந்து சமயலறைக்கு முன்னால் இருந்த அம்மியில் வைத்து அரைத்தார். நன்றாக அரைத்த மாங்காயை கிண்ணத்தில் எடுத்து தேவையானளவு நீரும் ஊற்றி அதனை வடியால் வடித்து மூன்று குவளையில் ஊற்றிக்கொண்டு வந்து தங்கரெத்தினம் கொடுக்க செல்வரெத்தினம், செம்மணத்தாத்த தங்க ரெத்தினம் மூவரும் மாங்காய்ப்பானம் குடித்தார்கள்.

"நல்லா இருக்குத் தங்கரெத்தினம். இத ஒரே குடிக்கலாம் போல கிடக்குப் புள்ள. தேத்தண்ணிக்குள்ள சீனிய அளவு கணக்கில்லாம என்ர மருமகள் போடக்கொள்ள நான் சொல்றனான். 'ஏண்டியம்மா இவ்வளவு சீனி போடுறா. இப்ப சீனி வருத்தமெல்லாம் வருதாம். இந்தப் பிள்ளகளுக்கும் சின்னனிலயே அந்த வியாதி வந்திரப் போகுது எண்டு. ஆனா அவளெண்டா கேக்கிறதே இல்லப் பிள்ள.இப்பஎண்டாஎண்டா,போனகிழம எண்ர பொடியன் இடதுகை நோவுது, கழுத்தும் கடுக்குது எண்டுத்துக் கிடந்தான். பிறகு மூதூரில செல்வம் மருத்துவமனைக்குப் போய் சோதிச்சவனாம். அவனுக்கு சீனி இருநூற்றி முப்பத்தைஞ்சு எண்டு வந்து சொன்னான். நானெண்டா சரியான கிழிதான் குடுத்தன். இனிகுளிசய ஒரே போட்டுப் பாரன்." செம்மணத்தாத்த மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார்.

"இப்ப அவருக்கு முப்பத்தாறு வயசுதானே இருக்கும். அடக் கடவுளே என்ன கொடுமடாப்பா இது. கவனமா இருக்கச் சொல்லுங்க ஆத்த." என தங்கரெத்தினம்; சொல்லிவிட்டு அவர்கள் பலதும் பத்தும் கதைத்துவிட்டு தங்கபுரத்தை நோக்கி தங்களது மிதிவண்டிப் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org